# வைத்தீஸ்வரம்

# 2021

# VAITHEESWARAM



14th Anniversary Magazine

Ottawa Sivan Temple



உ

சிவமயம்

# வைத்தீஸ்வரம்

## 14 வது ஆண்டு நிறைவு மலர்

# VAITHEESWARAM

## 14th Anniversary Magazine



**ஒட்டாவா சிவன் கோயில்   OTTAWA SIVAN TEMPLE**

2104 Roger Stevens Drive, North Gower,
Ontario K0A 2T0, Canada.

Telephone:  613-489-1774
email: info@ottawasivantemple.com
www.ottawasivantemple.com

July 2021






## ஓம் நமச்சிவாய!

வல்லவாம்பிகா ஸ்ரீ தையல்நாயகி சமேத வைத்தியநாத சுவாமியின் கிருபையினாலே இவ்வருடம் 14 வது ஆண்டு பூர்த்தியும் 14 வது அலங்காரத் திருவிழாவும் ஜூலை 2ம் திகதி தொடங்கி 11 நாட்கள் சிவனடியார்களால் பக்தியுடன் மிக விமரிசையாகக் கொண்டாடப் படுகிறது.

இவ்வருடம் சிவன் கோயிலின் ''வைத்தீஸ்வரம் – 2021'' எனும் சஞ்சிகையை ஆண்டு மலராக வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றோம். இம் மலரில் பெரியோர்கள் அளித்த ஆசிச் செய்தி களும், சிவன் கோயில் நிர்வாகத்தின் அறிக்கைகளும், புதிய சிவன் கோயில் திட்டத் தின் முன்னேற்ற அறிக்கையும், சென்ற வருட கோயில் கணக்கு அறிக்கையும், தலைவரின் செய்தியும், சைவ சமய, ஆன்மீகக் கட்டுரை களும்; அத்துடன் சென்ற வருட அன்பளிப்பு கள் பிரகாரம் ஆலயத்தின் அங்கத்தவர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர் களின் பெயர் பட்டியலும் வெளியிடப்பட்டு ள்ளது.

வைத்தியநாத சுவாமியின் கிருபையினால் இக் கோயில் மேலும் மேலும் வளர்ந்து சிவனடியார் க்கு சிறந்த சேவை நல்க கீழ்க்காணும் காரணி கள் மேன்மையுற வேண்டுமென சிவனைத் தொழுது அடியார்க்கு விண்ணப்பிக் கின்றோம்:

1) கோயிலில் தினப்பூசை உபயம் செய்யும் அடியார்கள் தொகை உயர்வடைந்து அதனால் கோயில் அங்கத்தவர் எண்ணிக்கை உயர்தல் வேண்டும்.

2) கூடிய விரைவில் சிவனுக்கு அழகான புதிய கோயில் அடியார்கள் ஆதரவினால் இலகுவாக அமைதல் வேண்டும்.

3) கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில் அமை யும் இப் புதுக்கோயிலின் அருமை பெருமை பற்றி அறிந்து கனடா வாழ் சைவ மக்கள் அனைவரும் இக்கோயிலில் இருந்து அருள் பாலிக்கும் வல்ல வாம்பிகா ஸ்ரீ தையல்நாயகி சமேத வைத்திய நாத சுவாமியைத் தரிசிக்க வருதல் வேண்டும்!

## AUM NAMASHIVAAYA!

By the grace of Vallavambika Sri Taiyalnayaki Sametha Vaithiyanatha Swamy this year devotees of Ottawa Sivan Temple are celebrating 12th Anniversary and 14th Annual Festival for 11 days starting from Friday July 2nd.

We have the pleasure to release the 14th Annual Temple Magazine: Vaitheeswaram 2021 on "Thiruvila" day. The magazine contains Greeting messages from Sivachariyars (Priests), Prime Minister of Canada, Member of Parliaments, Premier of Ontario Provice Government and North Gower Councilor. It also contains articles written by prominent people and devotees. In addition, the magazine also embodies Sivan Temple President's message, last year 2020 accounts report, List of Members of Temple, Progress report on New Temple Project and other useful information to devotees.

By the grace of Vaithiyanatha Swamy, we pray that this Temple in the Capital of Canada develops to provide much more services to the communities living in Ottawa with the support from devotees in the following areas:

1) Number of members of the Temple should increase significantly by more devotees coming forward to perform Day Poojas.

2) New Temple to Ottawa Sivan should be built in the near future with full support from devotees.

3) All Saivites and Hindu devotees living in North America and visitors to Canada should come to know about the name & fame of Ottawa Sivan Temple and visit this Temple to appreciate our Art and culture of the Temple and to get blessed by Vaithiyanatha Swamy.

உ

*சிவமயம்*

# சிவாகம சூடாமணி சிவஸ்ரீ நா. விக்னேஷ் சிவாச்சாரியார்
# ஆலய குருவின் ஆசிச்செய்தி



அன்புடையீர்,

அருள்மிகு தையல்நாயகி உடனுறை வைத்தியநாத சுவாமி தனிப்பெருங் கருணையினாலே குரு அருளும் திரு அருளும் துணை கொண்ட வண்ணமாக மாதொரு பாகனார்க்கு வழி வழி அடிமை செய்யும் சிவாச்சாரியார் குலத்தில் உதித்த சிவாகம திலகம் சிவஸ்ரீ நாகராஜ சிவாச்சாரியார் – அமுதா அவர்களின் குமாரனாக பேறுபெற்ற அடியேன் காஞ்சிபுரம் டாக்டர் உமாபதி சிவாச்சாரியார் அவர்களிடம் வேத ஆகமங்கள் பயின்று சிவ தீக்ஷை பெற்று நமது கனடா நாட்டில் ஒட்டாவா நகரில் வேண்டுவோர்க்கு வேண்டுவன அருள் பாலிக்கக்கூடிய எம்பெருமான் திருக் கோயிலில் பூஜிக்கும் பேறு பெற்றேன்.

கனடா நாட்டின் பிரதம அமைச்சரும், அமைச்சர்களும், அரசாங்க அதிகாரிகளும் சிறப்புற நல்லாட்சி புரியட்டும்! கோயில் அறங்காவலர் சபையும், இயக்குனர் சபையும் தங்கள் சமயப்பணியை வெற்றிகரமாகத் தொடரட்டும்! எல்லா வளங்களும் எல்லோர்க்கும் நிறைந் திருக்கட்டும்!
வேதவேள்விகள் தழைக்கட்டும்! தீயவை ஒழிந்து நன்மைகள் பெருகட்டும்! என

**வான்முகில் வழாது பெய்க! மலிவளம் சுரக்க மன்னன்**
**கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க**
**நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க**
**மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**

என்ற கச்சையப்ப சுவாமிகள் வார்த்தைகளால் வாழ்த்துகின்றேன்.

ஆகம விதிப்படி ஸ்ரீ வைத்தியநாத சுவாமிக்கு ஓர் புதிய ஆலயம் அமையட்டும்! இத்தகு நற்செயல்கள் இனிதே நிறைவேற இறைவன் ஸ்ரீ தையல்நாயகி அம்பிகை உடனுறை ஸ்ரீ வைத்தியநாதசுவாமியின் திருவருளை வேண்டி நிற்கின்றேன்.

***சிவத்தொண்டில்,***
***நா. விக்னேஷ்***

உ
*சிவமயம்*

# சிவஸ்ரீ தியாகராஜ பூர்ணானந்த சிவாச்சாரியார் உற்சவகால பிரதமகுருவின் ஆசிச்செய்தி



மன நிம்மதி சாந்தியினை நாடும் மக்களுக்கு மனச்சாந்தியினையும் உறுதி மிக்க பொருள்வளம் ,கல்வி விஞ்ஞான வளம் மேலோங்கிய ஊருக்கு அழகினையும் அளிப்பன ஆலயங்களே!

எல்லாம் வல்ல இறைவன் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன் சந்திரன், எஜமான் (ஆன்மா )என்னும் அஷ்ட மூர்த்திகளாக உலகெங்கும் நீக்கமற நிறைந்து காட்சி தருகின்றான்.

சிவம் என்பதற்கு அனாதியாய் மலமில்லாத சர்வ வல்லமை உடையவர் என்றும், லிங்கம் என்பதற்கு உருவம், அருவம் அருஉருவம் என்பதாக குறிக்கும் .ஆதி அந்தம் இல்லாத அருட்பெரும் சோதியாக லிங்கோத்பவராக சிவன் விளங்குகின்றார். படைத்தல், காத்தல், அழித்தல், அருளல்,மறைத்தல் என்று சொல்லப்படுகின்ற ஐந்து தொழில்களுக்கு காரணமானவர். ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என்ற பஞ்சப்பிரம மந்திரங்களும் சிவனின் ஐந்து முகங்களைக் குறிக்கும் .ஐந்து முகங்களில் இருந்து நான்கு வேதங்களும், 28 ஆகமங்கள் ,கலைகள் தத்துவங்கள், புவனம், பத மந்திரம் முதலியன தோன்றின. சிவபெருமான் அன்பே வடிவானவர் .அன்பே சிவமாக உள்ள உண்மையை உணர்ந்து சிவனை மனம் மொழி மெய்யினால் ஆராதிப்பவர்கள் யாவரும் வாழ்க்கையில் ஓங்கி உயர்ந்து வருபவர்களாக அமைவர் .

சிவ நெறியாகிய சைவநெறி அன்பு நெறியாக மேன்மை கொள் சைவ நீதியாக உலகம் விளங்குகின்றது .

இந்து மதத்தில் சிவ வழிபாடு சிவலிங்க வடிவில் மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றது. அந்த வகையில், ஒட்டாவா நகரில் எழுந்தருளி வேண்டும் வரம் அளிக்கும் வைத்தியநாதன் ஆக விளங்கும் தையல் நாயகி உடனுறை வைத்தீஸ்வர பெருமானை வணங்கி வாழ்வின் பதினாறு பேறும் பெற்று பூரணமான ஆனந்தமான வாழ்வு வாழ்வோமாக.

**சர்வே ஜனா சுகினோ பவந்து!**

PRIME MINISTER · PREMIER MINISTRE

July 2021



Dear Friends:

I am pleased to extend my warmest greetings to everyone taking part in the 13th Annual High Festival, hosted by the Ottawa Sivan Temple.

This event offers members of the congregation a wonderful opportunity to reaffirm their spirituality and to share their rich heritage with the community. I am certain that everyone in attendance will rejoice in the many observances planned to mark this special occasion.

It continues to be a challenging time for planning and hosting events. That is why I would like to thank the dedicated organizers for ensuring this year's festival could still take place while respecting public health guidelines. Canada is truly a multicultural nation, made stronger and more resilient by our diversity.

Please accept my best wishes for an enjoyable festival.

Yours sincerely,

The Rt. Hon. Justin P. J. Trudeau, P.C., M.P.
Prime Minister of Canada



Premier of Ontario - Premier ministre de l'Ontario

July 3, 2021

**A MESSAGE FROM PREMIER DOUG FORD**

I want to extend warm greetings to all the members of the Ottawa Sivan Temple as you celebrate your Annual Festival.

This is an opportunity for your religious community to renew bonds with loved ones and to celebrate your faith. Ontario is proud to be home to a vibrant Tamil Hindu community that has done much to help build this great province.

I want to thank the good folks at the Ottawa Sivan Temple and those who put together Vaitheeswaram for your commitment to the spiritual and social wellbeing of your members and your community.

As we get Ontario back on track, our religious communities will play a vital role in keeping people connected and engaged, ensuring the success of our emergence from this unprecedented challenge.

Have a blessed and joyous celebration.

**Doug Ford**
**Premier**




**Jim Watson**
Mayor/Maire

**Office of the Mayor**
City of Ottawa
110 Laurier Avenue West
Ottawa, Ontario K1P 1J1
Tel.: 613-580-2496
Fax: 613-580-2509
E-mail: Jim.Watson@ottawa.ca

**Bureau du Maire**
Ville d'Ottawa
110, avenue Laurier Ouest
Ottawa (Ontario) K1P 1J1
Tél. : 613-580-2496
Téléc. : 613-580-2509
Courriel : Jim.Watson@ottawa


July 2021

*Vallavambiga Sri Taiyainayaki Sametha Vaithiyanatha Swaamy Koil*
Ottawa Sivan Temple
2104 Roger Stevens Drive
North Gower, Ontario

Dear Ottawa Sivan Temple Members,

On behalf of Members of Ottawa City Council, it is my distinct pleasure to extend a very warm welcome to the Board of Directors and congregants of the Ottawa Sivan Temple, along with the Saivite, Hindu and Tamil community members celebrating eleven days of festivals from July 3rd to 13th 2021.

As Head of Council, I am also delighted to have the opportunity to offer sincerest greetings to the readers of the annual magazine *Vaitheeswaram 2021* during this important community celebration for the Saivite, Hindu and Tamil population in the Ottawa region.

In addition, I want to take this opportunity to acknowledge Ottawans of Tamil, Hindu and Saivite heritage for their important contributions to the economic development and prosperity of our nation's capital, as well as to the dynamic social and cultural fabric of our community.

My congratulations to the editors and contributors of this annual magazine, which highlights major events and community news for its readers.

Allow me to convey my best wishes to the readers and Ottawa Sivan Temple Members for a most successful and memorable celebration.

Sincerely,

Jim Watson, Mayor
City of Ottawa



# PIERRE POILIEVRE

MEMBER OF PARLIAMENT

CARLETON

I am very pleased to extend my congratulations and best wishes to Ottawa Sivan Temple as you celebrate your 14th Anniversary in 2021.

As you gather and safely reunite together for your Annual Festivals this July, may you continue to learn, support each other, and care for those in need of a helping hand.

I would like to commend President Kugendran Sabaratnam, Secretary Jeyaseelan Aiyadurai and the dedicated Board of Directors as you mark another year of hard work and dedication. Ottawa is better for the contributions of the Ottawa Tamil Hindu community, and I thank you for making our city such a beautiful and diverse place in which to live.

Congratulations again on this happy occasion. I look forward to many years of working together as your congregation continues to grow and thrive.

Sincerely,

Pierre Poilievre P.C., M.P.
Carleton



**Chandra Arya**
Member of Parliament / Député - Nepean

Working hard for you
Je travaille sans relâche pour vous

Constituency / Circonscription
240 prom. Kennevale Dr., Suite/pièce 201
Nepean, ON K2J 6B6
Tel/Tél. : (613) 825-5505

@AryaCanada
@AryaCanada
@ChandraAryaCanada

Chandra.Arya@parl.gc.ca
www.ChandraArya.ca

May 31, 2021

Jeyaseelan Aiyadurai
Secretary, Ottawa Sivan Temple

As the Member of Parliament for Nepean, I would like to extend my best wishes to all those taking part in Ottawa Sivan Temple's 13th annual festival this July.

Since we have been dealing with the COVID-19 pandemic, we have all had to adapt and change the way we mark life's milestones and participate in community, religious and cultural events. While this year's festival may look different, I hope it will still be an opportunity for members of the temple to come together (virtually if required) to celebrate.

I am glad to note that the temple's board has decided that the festival will be conducted abiding by the Government rules and regulations due to COVID-19 pandemic. It is with cooperation like this from all Canadians that we have been successfully managing the challenges of the pandemic.

With the blessing of God Siva, hopefully we all come back to our normal life as soon as possible. As in previous years, I look forward to joining with other devotees for an in-person participation in future festivals.

I would like to take this opportunity to recognize the contributions that Canadians belonging to the Hindu faith have made to the socioeconomic development of Canada and the rich multicultural fabric of our country.

Once again, I wish you all the best for the annual festival.

Sincerely,

Chandra Arya
Member of Parliament / Député – Nepean

SCOTT MOFFATT
Councillor | Ward 21 | City of Ottawa
Chair | Environment Committee

110 Laurier Avenue
Second Floor
Ottawa, ON
K1P 1J1

June 2021

As City Councillor for Ward 21, I am again honoured to extend warm greetings to everyone attending the Temple festival hosted by Ottawa Sivan Temple. We are fortunate in our nation's capital to have such rich cultural diversity which connects our residents and strengthens our communities.

Ottawa Sivan Temple has served as a place of worship and sanctuary for the Hindu community for the past several years, reinforcing cultural and religious diversity in rural Ottawa and beyond.

Thank you for being a welcoming place for seniors, a learning place for children and a social place for the greater community. I am so glad that even through these challenging times, you continue to embrace and share such an important tradition.

Sincerely,

Scott Moffatt
Ward 21 Councillor
City of Ottawa

Ottawa

Scott.Moffatt@Ottawa.ca
613-580-2491 | TeamTwentyOne.ca

## ஒட்டாவா சிவன் கோயில் தலைவரின் செய்தி



வணக்கம்! வல்லவாம்பிகா ஸ்ரீ தையல்நாயகி சமேத வைத்தியநாத சுவாமியின் கிருபையால் 2020ம் ஆண்டு ஜூன் மாதம் தொடங்கி ஒட்டாவா சிவன் கோயிலை பக்தியுடன் வெற்றிகரமாக நிர்வகித்து வருகிறோம். 2020 மார்ச் மாதம் முதல் கொரானா கொடிய தொற்று நோயின் காரணமாக அரசாங்க விதிகளுக்கமைய 2 மாதங்கள் எமது ஆலயம் மூடப்பட்டிருந்த காலத்திலும் 3 நேரப் பூசைகளும் விசேட பூசைகளும் தவறாமல் நடாத்தப் பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. கொரோனா தொற்றுக் காலத்தில் அடியவர்கள் ஆலயத்துக்கு வழக்கம் போல் வரமுடியாமையால் பூசைகள் இணைய வாயிலாகப் பரப்ப ஒழுங்குகள் செய்தோம். மற்றும் நிர்வாகம் சம்பத்தப்பட்ட நடவடிக்கைகளும் இணையத்தின் வாயிலாக நடாத்தப் பட்டன.

ஆலயம் மீண்டும் திறக்கப்பட்டபோது அரசாங்க விதிகளுக்கமைய கொரோனா நோய் தடுப்புக்கான விதிகள் இறுக்கமாக கடைப்பிடிக்கப்பட்டன. 2020 ஜூன் மாதம் இறுதியில் பதவியேற்றபோது எமது பதவிக்காலத்திற்கான குறிக்கோள்கள் வரையறுக்கப்பட்டன. அவையாவன எமது ஆலயத்தின் நிர்வாக செலவுகளைத் தாங்கும் தினப்பூசை உபயகாரர் களின் எண்ணிக்கையைக் கூட்டுவது, எமது ஆலயத்தை சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருப்பது, எதிர்கால நிர்வாகக் குழுவினருக்கு உதவியாக கட்டமைப்புகளைத் தயார் செய்வது ஆகியனவாம். 2020 ஜூலை நடந்த அலங்காரத் திருவிழாவும் அரசாங்க விதிகளுக்கமைய ஆலயத்தினுள்ளேயே செய்யப்பட்டன.

இக்காலத்தில் சிறுவர்க்கான பஜனை வகுப்புக்கள் இணையதளம் வாயிலாக மாதம் இருமுறை எடுத்துவரப்பட்டது. பல சிறுவர்கள் பங்குபற்றி வருகின்றனர். சென்றவருடமும் கோடைகால மாணவர் வேலைவாய்ப்புத் திட்டத்தினூடாக எமது சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. எமது அடுத்த சந்ததியினர் எமது சமயத்தையும் கலாச்சாரத்தையும் எதிர்காலத்தில் பேணிக்காக்க ஏதுவாக இப்பணி அமையும் என நம்புகிறோம். சென்றவருடம் சிறுவர்களுக்கான கோடைகாலப் பட்டறை இரண்டு வாரங்களுக்கு இணையதளம் மூலம் நடாத்தப்பட்டு, ரொறொண்டோ, ஒட்டாவா, மொன்றி யாலைச் சேர்ந்த 40 சிறுவர்கள் பங்கு பற்றினர். இதில் பங்குபற்றிய 20க்கும் மேலான சிறுவர்கள் பட்டறை முடிவடையும் காலத்தில் பஞ்சபுராணங்கள் பாடும் ஆற்றல் பெற்றிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் சிறுவர்களுக்கான இணையவழி யோகா வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகிறது.

நிர்வாகிகள் ஆலயத்தை தூய்மையாக வைக்க வேண்டிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். கொரானா காலத்திலும் அடியார்கள் பரிபூரணமான ஆதரவை வழங்கியமைக்காக எமது பரிபூரணமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். எமது சேவை ஆலயத்துக்கும் அடியார்களுக்கும் சென்று சேர உதவிய தன்னலமற்ற தொண்டர்களுக்கும், அறங்காவலர்களுக்கும், இயக்குனர்களுக்கும் இத்தருணத்தில் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். எம் கடன் பணி செய்து கிடப்பதே.

- *குகேந்திரன் சபாரத்தினம், தலைவர், ஒட்டாவா சிவன் கோயில்.*

# MESSAGE FROM PRESIDENT, OTTAWA SIVAN TEMPLE



Dear Devotees! By the grace of Vallavambika Sri Taiyalnayaki Sametha Vaithiyanatha Swamy present Board of Directors headed by me is administering Ottawa Sivan Temple since June 2020. As you all are aware, Sivan Temple was closed to devotees from March, 2020 for 2 months abiding by Canadian Govt Covid-19 rules declared. It is remarkable to note that even in those days all 3 daily poojas and special day poojas were conducted regularly. During this time important Poojas were broadcasted over internet for devotees to worship from homes.

When the Temple was re-opened to devotees, Covid-19 rules from Govt were strictly implemented at Temple. When we took over the Temple administration in 2020 June, our Board of Directors aims to achieve were decided upon and we were working systematically to reach our targets. Our aims were to increase the amount of Day Poojas by finding new sponsors, which forms the major portion of support for operation of Temple; to keep our Temple clean and beautiful, to organize administrative records and office materials and procedures to make it easy for future administrations of Temple. In addition, we conducted successfully and completed the celebrations of the Annual Festival Poojas for 13 days in July 2020 abiding by Covid-19 Government regulations.

We recruited summer students to work for Temple from our community last year also, which was provided by Government through Canada Summer Student Employment scheme. We believe that by providing employment to students in our Temple will help the youngsters to understand our religion and culture. During this period Children Bhajan sessions were conducted over internet by-weekly in which children are participating regularly In this respect, we also conducted summer camp to children for 2 weeks over Zoom network last year, 2020 during the month of August. Forty children from Toronto, Ottawa and Montreal joined this camp and it was a great success as over twenty children became capable to sing "Panchapuranam" by end of the camp. In addition to the above, we have also started a weekly Yoga Class for Children over Zoom network which is attended by a significant number of children.

Our Directors have taken several steps to keep Temple clean and beautiful. We are whole heartedly thankful to the immense support provided by devotees. We are also grateful and full of thanks to Volunteers, Trustees and Directors for the great services continually given to Temple and Administration to carry on with activities in Temple smoothly. Our duty is to serve Sivan omni-present in everybody and everything!

**Kugendran Sabaratnam, President, Ottawa Sivan Temple**

# சைவமும் தமிழும்

உலகின் தொன்மையான மதங்களுள் சைவ மதமும் ஒன்றாகும். முன்னைப் பழைமைக்கும் பின்னைப் புதுமைக்கும் பெற்றியதாய் விளங்குகின்ற சைவமதமானது, பாரத நாட்டில் நிலைபெற்றுள்ள இந்துமதத்தின் அறுவகைச் சமயப்பிரிவுகளுள் தலையாயது. இதற்கு அடுத்தாற்போலவே வைணவம் விளங்குகின்றது. 'சைவம்' என்பது சிவத்தைச் சார்ந்தது எனப் பொருள்தரும். சைவசமயத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான். இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய சிந்துவெளி நாகரிகத்தின் ஹரப்பா, மொகிஞ்சதரோ நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்வுகளின்போது அப்பகுதிகளில் தமிழர்களின் முன்னோடிகளான திராவிடர்கள் வாழ்ந்தமையையும், அவர்கள் இந்து சமயத்தைப் பின்பற்றியதையும், அதிலும் சிவசமயத்தின் கூறுகள் அங்கே ஏராளம் காணப்பட்டதையும் அறிய முடிகிறது. இலிங்க வடிவான கற்கள், பசுபதி தத்துவத்தை உணர்த்தும் இலச்சினை, திரிசூல வடிவம், பிறைச் சந்திரன், சிவயோகி வடிவம் ஆகிய சைவசமய அடையாளங்களைக் காணமுடிந்துள்ளது. வேதகாலத்துக்கு முந்திய சிந்துவெளியில் சைவம் செழித்து வளர்ந்ததை இது உணர்த்துகின்றது. இன்றைய உலகில், பாரத நாட்டில் தமிழ்நாடு, கன்னடப்பிரதேசம், காஷ்மீர், வடஇந்தியப் பிரதேசங்கள் மற்றும் நேபாளநாடு, இலங்கை, மலேசியா, பீஜித்தீவுகள், பாலித்தீவு முதலான நாடுகளிலும் - பிரதேசங்களிலும் சைவசமயத்தவர்கள், சைவசமயப்பின்னணியில் வந்தவர்கள் வாழ்வதை அறியமுடிகிறது. உலகில் சுமார் தொளாயிரம் மில்லியன் இந்துக்கள் வாழ்கின்றனர். இவர்களில் 450 - 500 மில்லியன் மக்கள் சைவசமயத்தைக் கடைப்பிடிப்பவர்கள்.

சமயம் என்பது வெறும் பேச்சளவில் நிற்பதில்லை. வெற்றுச் சம்பிரதாயங்களல்ல. சிந்தையாலும், செயலாலும் வாழும் வாழ்க்கையே ஆகும். அத்தகைய வாழ்வானது தொன்று தொட்டு ஈழநாட்டுச் சைவமக்களுக்கு வாய்க்கப்பெற்றது. அத்தூய்மையான பண்பாட்;டுச் செல்நெறியில் அறத் தொடர்புடன் பயணிக்கும் பாக்கியம் சைவமக்களுக்கு வாழ்வாதாரமாக அமைந்தது. ஈழத்தின் இரண்டாவது பெரிய இனமான தமிழர்களில் பெரும்பாலோர் சைவர்கள், இராவணேஸ்வரன் காலம் முதலாகத் தொடங்கி சம்பந்தர், சுந்தரர், அருணகிரிநாதர் ஆகியோரது தெய்வீகப் பனுவல்கள் மூலமாக நிலைபெற்று, இன்று வரையிலும் நின்று நிலைக்கின்ற வாழும் சமயமாக ஈழத்துச்சைவம் விளங்குகின்றது. அந்நியர்களின் ஆக்கிரமிப்புகளினின்றும் தன்னைத் தூய்மைசெய்து, தப்பிப் பிழைத்து, பல சவால்களுக்கு முகம் கொடுத்து நிற்கும் வாழ்க்கைநெறியாக சைவசமயம் உயர்ந்துள்ளது. இந்தியாவில் இலிங்காயுத வழிபாட்டைத் தழுவுகின்ற வீரசைவம் கர்நாடகத்தில் பெருவழக்காயுள்ளது. நேபாளநாட்டில் "பிருத்தியபிஞ்ஞா" என்று அழைக்கப்படும் சைவம் தழைத்தோங்குகிறது. உலகில் ஒரேயொரு இந்து நாடாகவும் நேபாளம் பெருமைபெற்றிருந்தது. வட இந்தியாவில் வைணவமும், சைவமும் மக்களிடையே செல்வாக்குப் பெற்றுள்ளன. இந்தியர்களின் இந்துமதச் சார்பு அவர்கள் குடியேறிய நாடுகளிலும் பிரதிபலித்துள்ளது.

உலகில் சுமார் 100 மில்லியன் தமிழர்கள் எழுபது நாடுகளில் கூடுதலாகவும், குறைவாகவும் வாழுவதாகச் சொல்லப்படுகிறது. இவர்களில் கத்தோலிக்கம் - கிறிஸ்தவம் தழுவியவர்களைத் தவிர ஏனைய இந்துக்கள் யாவரும் சைவர்களேயாவர். இந்தியாவில் ஓரளவுக்கு சைவ - வைணவ வேறுபாடுகள் காணப்படினும் இலங்கைபோன்ற நாடுகளில் அவ்வாறில்லை. இந்து சமயத்தின் அறுவகைப் பிரிவுகளும் பாரதநாட்டில் பலம்பெற்று

விளங்குவதுபோன்று ஈழநாட்டில் காணப்படுவதில்லை. இங்கு சைவசமயமே உயிர்ப்புடையதாக விளங்குகின்றது. ஏனைய இந்துசமயப் பிரிவினரின் முதன்மைத் தெய்வ வழிபாட்டினைச் சைவத்தினுள் உள்ளடக்கி, "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார் தான் வருவார்" என்ற சிவஞானசித்தியாரின் கோட்பாட்டினைப் பின்பற்றும் வாழ்க்கைநெறியினை ஈழத்துச் சைவர்கள் கடைப்பிடித்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் தமிழர்களே என்பதும் குறிப்பிடத்தக்கது. உலகில் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலெல்லாம் அவர்கள் சைவ சமயத்தையே கடைப்பிடிக்கின்றனர். "அன்பே சிவம்" என்னும் திருமந்திரத்தின் உட்கிடக்கையே சைவசமயத்து வாழ்வினது உட்பொருளாகும். ஆன்மீகத்தின் உச்சநிலையில் உணரப்படுவதும் அதுவேயாகும். சைவசமயவாழ்வின் சகல கூறுகளையும் இணைத்து வைப்பதும் அன்பே ஆகும். பலவண்ணப் பூக்களைத் தொடுத்து மாலையாக்கும் நாராகச் சைவ வாழ்வை வளப்படுத்துவது எல்லையில்லாத தூயபேரன்பின் வெளிப்பாடு எனலாம். பிற உயிர்களிடத்தில் காட்டும் அன்புதான் இவ்வுலக வாழ்வுக்கும், மறுமை வாழ்வுக்கும் இயங்குதளமென்பதைச் சைவசமயிகள் எப்போதோ உணர்ந்துள்ளனர். அன்பின் வலைதனில் அகப்படும் ஆரமுதாக இறைவனைக் கண்டு நெக்குருகியுள்ளனர். இறைவனின் உயிர்களிடத்தான் அன்பினுக்கும், மனிதனின் இறைவன் மீதான அன்பினுக்கும் இடைவெளிகண்டு அதனை இதயத்தால் நிரப்ப முனைந்துள்ளனர்.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" எனப் பேசினார் திருமூலர். "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே" என்றார் தாயுமானவர். "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்பது அப்பர் வாக்கு. "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார், ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கும், கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி, வீடும் வேண்டா விறலின் விளங்கினார்" என்று பெரியபுராணத்தில் சேக்கிழார் குறிப்பிடும் இறையன்பு மீதூரப் பெற்றவர்கள் இத்தகையவர்களே. முற்றுந்துறந்த ஞானிகூட பெற்றதாயினை வழிபடும் பெருமையாற் சிறந்தது சைவம். "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில் அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" என்றவாறு சகலதராதர மக்களுக்கும் சமத்துவ வாழ்வைக் கூறியது சைவம். "நாம் யார்க்கும் குடியல்லோம்", "அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்சவருவதுமில்லை" எனப் புரட்சி செய்து மெய்யன்பர்கள் சைவசமயத்தை வாழ்வித்தனர். அந்த நீடிய நெறியே சைவசமயத்தவர்களை, சைவத்தமிழர்களை இன்றளவும் உயிர்த்துடிப்புடன் வாழச் செய்கின்றது.

சைவசமயக் கோட்பாடுகளை சுவேதாஸ்வர உபநிடதம் பெருமையுடன் எடுத்துச் சொல்லியுள்ளது. இருக்குவேதத்தில் போர்த்தெய்வமாகக் கூறப்படும் உருத்திரன் மூன்று பாடல்களில் வர்ணிக்கப்படுகின்றான். அவனே பிற்காலத்தில் யசுர் வேதத்தில் பலநாமங்களால் அர்ச்சிக்கப்படுகின்றான். சிவன் என்ற தமிழ்ச்சொல் வேதங்களில் பயன்படுத்தப்படாவிடினும் சிவ அடையாளங்கள் கூறப்பட்டுள்ளன. பிற்காலத்தில் மணிமேகலைத் தமிழ்க் காப்பியத்தில் சைவவாதிகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதன் பிந்திய காலங்கள் யாவும். சைவத்தின் எழுச்சியைக் காட்டுகின்றன. தமிழ் இலக்கிய மரபில் காரைக்காலம்மையாரின் 131 பாடல்கள் சிவனைப் பற்றியவை

"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் உந்தன் சேவடியே சிறந்து நின்றேன்" என அம்மையார் பாடியதும், பல்லவர் காலத்தில் நாயன்மார்கள் தங்கள் பாடல்கள் மூலம்

சைவமறுமலர்ச்சியை ஏற்படுத்தியதும், தமிழ்நாட்டில் ஊற்றெடுத்த அன்புநெறி வடநாட்டில் பரவியதும் வரலாறு. தமிழும் சைவமும் பிரிக்கமுடையாத் தொடர்புடையன. எண்ணிறந்த தமிழ்ப் பக்திப் பனுவல்களால் பெருமைபெற்றது சைவம். தமிழைப் "பக்திக்குரியமொழி" என வண.தனிநாயக அடிகளார் பாராட்டியதும் இதனாற்றான். உலகெங்கும் பரந்துவாழும் சைவர்களில் தமிழர்கள் அனைவரும் சைவசமயத்தவரே ஆவர். கிறிஸ்து சகாப்தத்திலிருந்து தமிழில் எழுந்த இலக்கியங்கள் பலவும். சைவத்துக்கு முதலிடம் கொடுத்துள்ளன. சோழர்கள் சைவசமயத்தவர்கள். அவர்கள் காலத்தில் பெரியபுராணம், கந்தபுராணம் ஆகிய சைவப் பேரிலக்கியங்களான காப்பியங்கள் எழுந்தன. 96 வகைப் பிரபந்தங்களில் அனேகமானவை சைவசமயச் சார்புடையவை. ஆலயங்கள், சிவனடியார்கள், மெய்யடியார்கள், அனுபூதிமான்கள், 63 நாயன்மார்கள், தமிழர்களின் தத்துவமாகிய சைவசித்தாந்த நூல்கள் பதினான்கு போன்றவை சுட்டிக்காட்டத்தக்கன. இன்றுவரை ஏராளமான தலபுராணங்கள் சைவத்திருத்தலங்கள் மீது பாடப்பட்டுள்ளன. பதி,பசு,பாசம் ஆகிய முப்பொருளுண்மையை வலியுறுத்துவது சைவசித்தாந்தம். மலபரிபாகம், சத்திநிபாதம், சுத்தாத்வைதம் ஆகிய நிலைகளைக் கூறுவது. முத்திநிலையில் இறைவனுடன் சேர்ந்து பேரின்பம் எய்துவது ஆன்மா எனக் கூறப்படுகிறது.

எனவே உலகில் நான்காவது பெரியமதமாகிய இந்துமதத்தில் உள்ளடங்கிய பெரும்பிரிவாகிய சைவசமயம் தமிழர்களின் வாழ்வியலோடு தொன்றுதொட்டு கலந்துள்ளது. நிலையாக அவர்கள் வாழும் நாடுகளைவிட அவ்வப்போது குடியேறிய நாடுகளிலும், புலம்பெயர்ந்து வாழுகின்ற வடஅமெரிக்க - ஐரோப்பிய நாடுகளிலும் தங்கள் மதத்தையும் பண்பாட்டையும் பேணிக்காப்பதில் முனைப்புடன் செயற்படுவது மகிழ்ச்சியான விடயமாகும். இருந்தும் பெருமைக்குரிய தமிழர்களின் சைவ வாழ்வில் இன்று காணப்படும் சிதைவுகளும், அசைவுகளும் வேதனையூட்டுபவைகளாகும். இரண்டு தசாப்தங்களுக்கு மேலாகப் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களிடையேயும் இக்குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன. பண்பாடு பறிபோதல், பண்பாட்டுச் சீரழிவு, பணமே பிரதான இலட்சியமாதல், விழுமியங்களை விமர்சித்தலும் புறக்கணித்தலும், பிறசமயங்களைத் தழுவுதல் முதலான செயற்பாடுகள் சைவமக்களிடையே - குறிப்பாகச் சைவத் தமிழர்களிடையே நிகழ்வது வருந்தத்தக்கது. மறுதலையாக உணர்வுபூர்வமாகச் சைவத்தைக் காப்பாற்றும் நோக்குடன் தமிழர்கள் பலர் செயற்படுவதும் நம்பிக்கையூட்டுவதாகும். சைவசமய வாழ்வு என்பது மனத்தாலும், மொழியாலும், செயலாலும் ஒருமித்ததாகவும் மிளிரவேண்டும். இளையவர்கள்பால் சமயநம்பிக்கைகள் ஊட்டம் பெறவேண்டும். இறைநம்பிக்கையின் அடித்தளத்தில் அறவழியில் சைவர்களின் வாழ்வியற்கோலங்கள் புனையப்படவேண்டும். சமயவாழ்வின் மகத்துவத்திற்குக் கல்வியின் துணை பாரியது. கல்விநிறுவனங்கள் தம்பணி உணர்ந்து கலைக்கோயில்களாகவும்;, மனக்கோயில்களாகவும் திகழவேண்டும் சமயத்தின் மையவிடமாகச் சைவாலயங்கள் மீண்டும் சோழர் காலத்தை நினைவூட்டிப் பணிசெய்து பயன்பெறவேண்டும். அப்போது, திறவாத இதயங்கள் யாவும் இறைவனை நோக்கித் திறந்துகொள்ளும். அன்புநெறியின் பரவல் அதிகரிக்கும். பிறர் துன்பங்கண்டு இரங்கும் நெஞ்சம் கனியும். பிறவிப் பயனும் சைவவாழ்வினால் எய்தப்பெறும்.

- **ஆக்கம்: செ.திருநாவுக்கரசு, கலாநிதி, பண்டிதர், சைவப்புலவர், கலாபூஷணம் யாழ்ப்பாணம்.**

# நில்லு கண்ணப்ப!

நில்லு கண்ணப்ப! என்வலம் நில்லு கண்ணப்ப, என்று இறைவன் திண்ணப்பரை தனதடியிலேயே இருத்தி காட்சிதர அருளினன் என்றால், கண்ணப்பிய திண்ணப்பரின் குலம் செய்தவம் பெரிதன்றோ!. அன்றைய அகண்ட தமிழ்நாட்டில், திருக்காளத்திக்கு வடக்கே கிழக்குத்தொடர் மலைகளின் பேரெழிலையும் வளத்தையும் அரணாகக்கொண்ட பொத்தப்பி நாட்டில் மலைசார்ந்த உடுப்பூர் என்பது ஊர். அதன் தலைவன் வேட்டுவக் குன்றவர் குலத்தைச் சேர்ந்த நாகன். நாகனைப்பற்றிச் சொல்லும்போதே, "பெற்றியால் தவமுன் செய்தான்" என்பார் சேக்கிழார் பெருமான். உயர்ந்த மறவர் தாயத்தின் தொல்குடியில் பிறந்த தத்தை என்ற தலைவியொடு, வெஞ்சின சிங்கம் போல, வில்லாற்றலில் மிகுவலி கொண்ட நாகன், சிறந்த காதல் வாழ்க்கை வாழ்ந்தான். ஊராரைக் காத்து நின்ற நாகனையும் தத்தையையும் ஊரார் போற்றி நின்றனர், ஆயினும், மணமாகி நெடுங்காலம் ஆகியும் மகப்பேறில்லை என்ற பெருங்குறை அவரை வாட்டிக்கொண்டே இருந்தது. "இவர்க்கினிப் புதல்வர்ப் பேறே அரியதென்று எவருங் கூற" என்று கண்ணப்ப நாயனார் புராணத்தில் (பாடல்-10) சேக்கிழார் பெருமான் கூறும்போது, "முற்பிறப்பில் அரிய தவம் செய்திருந்த நாகன் மக்கட்செல்வமின்றி தவித்தது ஏனோ என்று கேள்வியும் எழுகிறது.

உயர்ந்த பேற்றைத்தர, கந்தனருள் காக்க வைத்ததோ? நாகனும் தத்தையும், கவலை தீர, முருகனின் கால்களைக் கெட்டியாகப் பற்றினர். பிள்ளை வேண்டி, கந்த நோன்பு இருக்கத் துவங்கினர்!. "முருகவேள் முன்றிற் சென்று பரவுதல் செய்து நாளும் பராய்க்கடன் நெறியில் நிற்பார்" – (க.நா.பு-10). இன்றைக்கும் பிள்ளைவரம் வேண்டி, கந்தவாறு நோன்பு என்கிற கந்த சட்டி நோன்பு ஒரு மண்டிலக் காலம் கடைபிடிப்பது வழக்கமாக இருக்கிறது.

கந்த நோன்பின்போது, நாகனும் அவன் மனைவி தத்தையும் நிதமும் முருகன் கோயிலுக்குச் சென்று பிள்ளை வேண்டி வழிபட்டு நின்றார்கள். "எனக்கு பிள்ளை கொடு, உனக்கு இன்னின்ன செய்கிறேன்" என்றும் நேர்ந்து கொள்கிறார்கள். இதை பராய்க்கடன் என்று பெரியபுராணம் சொல்கிறது.

சேவற்கொடியானும் மயிலை ஊர்தியாகக் கொண்டவனுமான தங்கள் குலதெய்வம் முருகனுக்கு, தம்முடையது என்று இல்லத்தில் வளர்த்த காப்புச்சேவல்களையும், வண்ண வரிகளும் ஏழுநிறங்களும், கண்போன்ற அழகிய சித்திரங்களும் அழகு செய்யும் மயில்களை “இவை இனி எமதல்ல, உனது” என்று முருகனின் கோயிலில் சேவலையும் மயிலையும் காணிக்கையாக விட்டனர். "வாரணச் சேவலோடும் வரிமயிற் குலங்கள் விட்டு.." (க.நா.பு 11). இன்றைக்கும் முருகன் கோயில் உள்ளிட்ட பல கோயில்களுக்கும் காணிக்கை செலுத்துவது மிகப்பரவலான பழக்கம். 2000 ஆண்டுத் தொன்மம். காணிக்கையாகத்தான் விட்டார்களே தவிர, வேட்டையாடி விலங்குகளைக் கொல்வதைத் தொழிலாகக் கொண்ட அவர்கள், முருகன் கோயிலில் உயிர்ப்பலியிடவில்லை என்பது நம்மை உற்று நோக்க வைக்கிறது.

முருகன் கோயிலின் ஒரு பகுதியிலோ, சுற்றியோ ஒலி இசைக்கும் மணிகளை தோரணமாகக் கட்டிவிடுகிறார்கள் நாகதத்தையர். காற்றில் அந்த மணிகள் தானாக ஆடி ஒலிக்கையில் எவ்வளவு இதமாக இருக்கும்? முருகனுக்கு, மணித்தோரண ஓசை, நாகதத்தையரின் வேண்டுகோளைச் சொல்லிக்கொண்டே இருக்கும் என நினைத்தார் போல!. இன்றைக்கும்,

கோயிலுக்கு, ஒலிக்கும் மணியை காணிக்கை செலுத்துவதும், அந்த மணிகள் கோயிலில் எண்ணிக்கையில் மிகுந்து தொங்குவதும் எளிதில் காணக்கூடிய ஒன்று. ஈராயிரமாண்டுத் தொன்மத் தொடர்ச்சி.

நித்தலும் கோயிலைத் தூய்மை செய்து, மணமிகுந்த கடம்ப மலர்களால் முருகனையும் கோயிலையும் அழகு செய்துகொண்டே இருந்தனர் நாகதத்தையர். "தோரண மணிகள் தூக்கிச் சுரும்பணி கதம்பம் நாற்றி.." (க.நா.பு-11). முருகனே கதி என்று கிடக்கும் நாகதத்தையர்க்கு ஊர்ப் பெண்டிரெல்லாம், ஒன்றுகூடி, குரவையாடி முருகனிடம் வேண்டுகிறார்கள். முருகனின் வீரத்தையும், காதலையும், அருளையும் வியந்து புகழ்ந்து பாடி ஆடி போற்றுவது குரவையாகும். மலையும் மலைசார்ந்த குறிஞ்சி நிலத்தின் தொன்மம் குரவைக்கூத்தாகும். மகளிர் எழுவர் முதல் ஒன்பதுபேர் வரை கைகோர்த்து, முருகனைப் புகழ்ந்து, தொழுது, அவனை வரச்சொல்லி, வேண்டுதலைச் சொல்லி, பாடி ஆடும்போது அருகிருப்போர் உடுக்கு, பறை போன்ற தாளங்களை முழக்கி, கொம்பினை ஊதி, மணியோசை எழுப்பியும் குரவைக்கு பின்புலமாயிருப்பர்; முருகனுக்கு பூ சாற்றி நறுமண தூபம் இட்டு, தீபம் ஏற்றி வழிபாடு செய்வர்.

இன்றைக்குக் கோயிலில் ஓரமாக நடன நிகழ்ச்சி எப்போதோ நடத்துகிறார்கள். சாமிக்கு நேரே மக்களின் குரவைப்பாடல் இடம்பெற்ற இடத்தில் சமற்கிருதப் பாடல்கள் கடவுளையும் மக்களையும் பிரிக்கின்றன. நமது தொன்மம் இங்கே கெட்டுப்போய்க் கிடக்கிறது கேட்பாரின்றி.

"கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய சுற்றத்தால் சுற்றப்படும்" என்ற வள்ளுவம் போல, ஊரார், நாகதத்தையரின்மேல் இருந்த அன்பினாலும், அவர்கள் நித்தலும் செய்துவந்த கடுமையான முருக நோன்பாலும், ஈர்ப்புற்று, அவர்களுக்குப் பிள்ளைவேண்டி, முருகவிழாவே எடுத்தனர். ஊரின் மதிப்பு மிக்க தேவராட்டியை சிறப்பித்து, வேலனுக்கு உகந்த இசைக்கருவிகளை இசைத்தும் முழங்கியும், தேவராட்டியின் மேல் வேலனை அழைத்து வரவைத்து, கந்தனின் அருளை நாகதத்தையர் பெறவைத்தனர் ஊரார்.

ஆறுமுகங்களை வருணிக்கும் திருமுருகாற்றுப்படை, அவற்றில் ஒரு முகத்தை வரம்தரு முகமாக எடுத்துச்சொல்லும். "ஒரு முகம், ஆர்வலர் ஏத்த, அமர்ந்து இனிது ஒழுகி, காதலின் உவந்து வரம் கொடுத்தன்றே.." என்று திருமுருகாற்றுப்படை சொல்லும் முருக இலக்கணம் புகழ் வாய்ந்தது. ஆர்வலர், அதாவது பத்தர்கள், முருகனை சரணடைந்து புகழ்ந்து வணங்கி வேண்டினால், முருகன் மனம் மகிழ்ந்து, அவர்களின் வேண்டுதல் பால் மனம் கனிந்து இரங்கி, மன மகிழ்ச்சியோடு அள்ளி அள்ளிக்கொடுப்பான். அது அவன் இயல்பு. உளமார முருகனை வேண்டி நிற்போருக்கு, "பூரணம் தருமே, நிரம்பெழில் ஆதனம் தருமே, அணிந்திடு பூடணம் தருமே, இகந்தனில் வாழ்வதும் தருமே...", என்றும் "அண்டுந் தொண்டர் வருந்தாமே, இன்பந் தந்தருளுந் தாளா!" என்றும் குமரகுருபரதாச சாமிகளின் பஞ்சாமிர்த வண்ணம் சொல்லும். ஈராயிரம் ஆண்டுக்கு முன்பு திருமுருகாற்றுப்படை சொன்னதை, 19-20ஆம் நூற்றாண்டின் பஞ்சாமிர்தவண்ணமும் சொல்கிறதென்றால், குமரக்கடவுள் ஊழி ஊழியாய் அவன் தொண்டர்களுக்கு வாரி வாரி வழங்கிய உண்மையன்றி வேறென்ன இருக்க முடியும்?

நெடுநாள் பிள்ளையில்லாமல் இருந்த நாகதத்தையர் குறிஞ்சிக் கடவுளை, தங்கள் குலதெய்வமான முருகப்பெருமானை சரணடைந்து, போற்றிப்புகழ்ந்து தொடர்ந்து பல்வேறு

வழிபாடுகள் செய்யவும், மனமுகந்த முருகப்பெருமான், அவர்களுக்கு குழந்தைவரம் அருள, தத்தை கருப்பமடைகிறாள். "கானவர் குலம் விளங்கத் தத்தைபால் கருப்பம் நீட" (க.நா.பு-13).

கருவானது உருவாகி நிலைபெற்று குழந்தையாக பிறக்கும் அந்த பத்து மாதங்களின் இன்னல்களை நன்கறிந்தறிந்த குன்றவனான நாகனின் குலம், முருகப்பெருமானால் தத்தை வயிற்றில் உருவாகிய அந்தக்கரு ஊனப்படாமல் நலமோடு வளரவும், தத்தையின் நலத்தைப்பேணவும் தேவையான காப்பு மருந்துகள் கொடுத்ததொடு, அதைவிட முக்கியமான முருகக்காப்பிற்காக அவனைத் தொடர்ந்து வழிபட்டும், பூசனைகளும், குரவை வழிபாடுகள் செய்தும் கருவைக் காக்கலாயினர். நிறைமாதத்தில், தேவராட்டியின் மேல் முருகன் வந்து ஆடும் வெறியாட்டு நிகழ்ச்சியும் செய்து, முருகனை வழிபட்டு வேண்டி நிற்க, உடுப்பூரும் இவ்வுலகமும் செய்த நற்றவத்தால், களங்கமில்லாத முழுநிலவைப்போன்ற மகவினைப் பெற்றெடுத்தாள் தத்தை. "அளவில்செய் தவத்தினாலே, பான்மதி உவரி ஈன்றால், எனமகப் பயந்த போது" (க.நா.பு-13). "திண்ணன்என் றியம்பும் என்னத் திண்சிலை வேட ரார்த்தார்" (க.நா.பு-17).

திண்ணன் என்று முருகருளால் பெயர் சூட்டப்பெற்று, குழந்தை வளரும் ஒவ்வொரு பருவமும் முருகனுக்கு பராய்க்கடன் செய்த நாகதத்தையரின் தவம், திண்ணனுக்கு வில்வித்தைக் கற்றுத்தருகையில்கூட தொடர்ந்திருந்தது. ஆசானிடம் முறையாக வில்வித்தையைக் கற்று பெரியவனாக ஆகி வேட்டைக்குப் போனபோதுதான், அந்தப் பன்றி திண்ணனை காளத்திநாதரிடம் கொண்டுபோய் சேர்த்தது வரலாறு.

உடுப்பூரில் முருகனருளால் கந்தவாறு நோன்பு செய்து பிறந்த பிள்ளையான திண்ணன், ஓட்ட ஓட்டமாக பன்றியின் பின்னால் ஓடி வந்து காளத்தி சேர்ந்ததை, உடுப்பூருக்கும் காளத்திக்கும் இடையே நின்று பார்த்துக் கொண்டிருந்தவன் திருப்பதி என்ற திருமலையில் நிற்கும் நெடியோன்.

அப்பனுக்கு பாடம் சொன்ன அந்த சுப்பன், நாகனுக்கும் தத்தைக்கும் அருளிய பிள்ளைதான் பின்னாளில் சுப்பனின் அப்பனுக்கு திருத்தொண்டராகிறான். சிவனின் அறுபத்திமூன்று திருத்தொண்டர்களில் ஒரு தொண்டரை நாகதத்தையர்க்கு அருளி சொலற்கரிய பெரும்பேற்றினை முருகன் அருளுகிறான். வேலன், நாகதத்தையர்க்கு பிள்ளை அருளினானா? அல்லது அவன் அப்பன் சிவனுக்கு திருத்தொண்டரை அருளினானா? திருத்தொண்டர் ஒருவரை படைக்க நாகதத்தையர்க்கு நெடுங்காலம் பிள்ளையில்லாமல் இருந்ததா? அப்படிப்பட்ட பிள்ளையைப்பெற நாகனும் தத்தையும் முன்செய்த தவமென்ன? என்றெல்லாம், என்றைக்கும் மனம் நிறைய சிந்திக்க வைப்பது நாகதத்தையரின் கந்தவாறு நோன்பு என்கிற கந்த சட்டி நோன்பும் கண்ணப்ப நாயனாரும்.

- **ஆக்கம்: நாக. இளங்கோவன். – கணிப்பொறியாளர், சென்னை.**

*திருக்கயிலையில் நந்தி தேவர் பணிவிடை செய்ய பிள்ளையாரும் முருகனும் அருகிருக்க பார்வதி துணையிருக்க வீற்றிருக்கும் சிவபிரானே சைவர்களின் பரம்பொருளாக விளங்குகின்றார்.*

# கடவுளைக் காண முடியுமா?

**சீடன்:** குருவே சில பக்தர்கள் வந்து இருக்கிறார்கள். அவர்கள் குரு கடவுளைக் காட்டுவாரா? எனக் கேட்கிறார்கள். அவர்களை அழைத்து வரட்டுமா?

**குரு:** கடவுளைக் காட்டச் சொல்லிக் கேட்கிறார்களா? வரச் சொல். அவர்களுக்குக் கடவுளைக் காட்டுவோம்.

*(சீடன் பக்தர்கள் 5 பேரைக் கூட்டி வருகிறான். பக்தர்கள் குருவை வணங்கி அமர்கிறார்கள்.)*

**பக்தர்1:** குருவே நாம் ரொம்பத் தூரத்திலிருந்து வருகிறோம். நேரே விஷயத்துக்கு வருகிறோம். நீங்கள் கடவுளைக் கண்டிருக்கிறீர்களா? எமக்குக் கடவுளைக் காட்ட முடியுமா?

**குரு:** நான் கடவுளை எப்போதும் கண்டுகொண்டே இருக்கிறேன். என்னால் உங்களுக்கும் கடவுளைக் காட்ட முடியும். நீங்கள் கடவுளை ஏன் காண விரும்புகிறீர்கள்?

**பக்தர்2:** கடவுளை நேரே கண்டால் எங்கள் ஆசைகள் எல்லாவற்றையும் பூர்த்தி செய்து கொள்ளலாம்.

**குரு:** அந்த நிலையில் நீஙகள் இருந்தால் கடவுளைக் காண்பது கடினம்.

**பக்தர்3:** நீங்கள் காட்டப்போகும் கடவுளை சிலவேளை நாங்கள் ஏற்கனவே பார்த்திருக்கலாம். பார்க்கும்போது எட இவரே கடவுள்? என்று சொன்னாலும் சொல்லுவோம். (எல்லோரும் சிரிக்கிறார்கள்)

**குரு:** தாயுமானவர் பாடலில் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் பாட்டு யாருக்கும் தெரியுமா?

**பக்தர்4:** எனக்குத் தெரியும் குருவே. பாடுகிறேன் (எனச் சொல்லிப் பாடுகிறார்)

**அங்கிங் கெனாதபடி எங்கும் ப்ரகாசமாய்**
**ஆனந்த பூர்த்தியாகி**
**அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே**
**அகிலாண்ட கோடியெல்லாந்**
**தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்**
**தழைத்ததெது மனவாக்கினில்**
**தட்டாமல் நின்றதெது சமயகோ டிகளெலாந்**
**தந்தெய்வம் எந்தெய்வமென்**
**றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது**
**எங்கணும் பெருவழக்காய்**
**யாதினும் வல்லவொரு சித்தாகி இன்பமாய்**
**என்றைக்கு முள்ள தெதுஅது**
**கங்குல்பக லறநின்ற எல்லையுள தெதுஅது**
**கருத்திற் கிசைந்ததுவே**
**கண்டன வெலாமோன வுருவெளிய தாகவுங்**
**கருதிஅஞ் சலிசெய்குவாம்**

**குரு:** இப்பாட்டின் கடைசி வரியில் ''கண்டன எல்லாம் மோன உரு வெளியதாகவும் கருதி அஞ்சலி செய்குவாம்'' எனப் பாடுகிறார். இந்த சுத்த வெளியே கடவுள். இந்தப் பிரபஞ்சத்தை பாருங்கள்.

**பக்தர்:** கடவுள் கோயிலில் மாத்திரம் இருக்கிறாரா குருவே?

**குரு:** இல்லை கடவுள் எங்கும் இருக்கிறார். கோயிலிலும் இருக்கிறார். இப் பிரபஞ்சம் இயங்கிக்கொண்டு இருக்கின்றது. இந்த இயக்கம் சக்தியின் தொழிற்பாடு. இப் பிரபஞ்சத்தின் அப்பால் பிரபஞ்சத்தை சூழ்ந்திருக்கும் சுத்தவெளிவே சிவன். சிவன் நிலையாக இருக்கும்போது சக்தி இயங்குகிறாள் அதனால் பரமாணுக்கள் பிறக்கிறது. அணுக்கள் ஒவ்வொன்றும் சுற்றிச் சுழல்கிறது. கோடானு கோடி அணுக்கள் சேர்ந்தே இக் கிரகங்கள், உணர்ச்சியற்ற சடப்பொருள்கள் உணர்ச்சியுள்ள ஓரறிவு, ஈரறிவு, மூவறிவு, நான்கறிவு, ஐந்தறிவு உயிர்வாழ்வனவும், ஆறறிவுள்ள மனிதனும் பிறந்துள்ளனர். இவைகள் ஒவ்வொன்றிலும் இறைவன் பரம அணுக்களாக சுத்த வெளியாக உடனிருந்தும் சூழ்ந்து அழுத்தியிருந்தும், தனியாய் இருந்தும் அவரவர் வினைக்கேறப (கர்மத்துக்கேற்ப) பலன்களைக் கொடுத்து உலகத்தை இயக்குகிறான். இதையே திருவள்ளுவர்,

**எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு.**

எனும் குறளால் கூறுகிறார்.

**குரு:** ஒரு அப்பிள் பழத்தைக் காட்டி இது என்ன? எனக் கேட்கிறார்.

**பக்தர்5:** இது அப்பிள்பழம் குருவே.

**குரு:** இதை துண்டு துண்டாக வெட்டி கடைசியில் வரும் ஆகச் சிரிய துண்டை என்னவென்று சொல்லலாம்?

**பக்தர்5:** அணு என்று சொல்லலாம்.

**குரு:** சரியாகச் சொன்னீர்கள். விஞ்ஞானத்தின்படி அந்த அணு சுற்றியபடியே இருக்கிறது. சுற்றுவது நின்றால் சுத்தவெளி. அந்த அணுவும் அணுக்களின் உள்ளேயும் வெளியேயும் உள்ள சுத்தவெளியே கடவுள் அவையே மெய்ப்பொருளாகும். இப்போது எனது சீடன் இந்த அப்பிளை வெட்டி உங்கள் எல்லோருக்கும் தருவார். நீங்கள் சாப்பிட்டதும் அப்பிள் என்ற பொருள் மறைந்துவிடும் ஆனால் அப்பரம அணுக்கள் உங்கள் வயிற்றில் இருக்கும். ஆகவே திருவள்ளுவர் கூறியது போல் எல்லாப் பொருள்களும், உயிரிங்களிலும் மெய்பொருளை அதாவது கடவுளை சிவனையும் சக்தியையும் காணலாம். திருவள்ளுவர் மேலும் ‘‘

**பிறப்புஎன்னும் பேதைமை நீங்கச் சிறப்புஎன்னும்**
**செம்பொருள் காண்பது அறிவு''**

என்னும் குறளில் பிறவிக்குக் காரணமாகிய அறியாமை நீங்கி எல்லாவற்றிலும் செறிந்து இருக்கும் சிறப்பு என்னும் பரம்பொருளை காண வேண்டும் என்கிறார்.

- **ஆக்கம்: செல்லையா தெய்வசிகாமணி**

# தமிழர் சமயம்

உலகில் தோன்றிய மக்களினங்களில் நாகரீக வளர்ச்சியில் முன் நிற்பவர்கள் தமிழர்கள் என்பது ஆய்வாளர்களின் கருத்து. திராவிட நாகரீகமாம் சிந்து வெளி நாகரிகத்தைத் தோற்றுவித்தவர்கள் தமிழர்கள். திராவிட மொழிகளுள் மிகப் பழமை வாய்ந்த மொழி தமிழ் எனக் கொள்ளப் படுகின்றது. துமிழர் பின்பற்றிய சமயம் சைவம். சுpந்து வெளி நாகரீகத்தின் தொட்டில் எனப்படும் இந்து கங்கைச் சாரலில் மொகஞ்சதாரோ, ஹராப்பா ஆகிய இடங்களில் 1920ம் ஆண்டு தொடங்கப்பட்ட அகழ்வாய்வின் பயனாக திராவிட நாகரீகத்தின் உண்மையும், உயர்வும் உலகுக்கு வியப்பை தரத்தக்க பல செய்திகளையும், தகவல்களையும் தந்துள்ளது. இன்றும் காஸ்மீரப் பகுதியில் சைவசயத்தவர்கள் வாழ்ந்து வருவதோடு அதனை காஸ்மீரியச் சைவம் என்றே அழைக்கின்றனர். அவர்களில் ஒரு சிலர் இன்றும் சிவலிங்கத்தை தமது கழுத்தில் அணிந்து வருகின்றனர். சைவசமயம் தோன்றியது எப்போ என்பது கேள்;விக்குறியாக இருப்பினும் ஆரிய இனத்தினர் நாடோடிகளாக, மந்தை மேய்ப்பவர்களாக கைபர் கணவாய் ஊடாக இந்திய உபகண்டத்தில் நுளையும் முன்னர் சைவசமயம் வேரூன்றியுள்ளது என்பது வெளிப்படை. இங்கு மேயப்பர்களாக வந்த அவரகள் உயர்நிலை பெற்றிருந்த சைவத்தைத் தமமாக்கிக்கொண்டு வை~;ணவத்தையும் சைவத்தையும் போற்றுகின்றனர்.

சைவசமயமே சற்சமயம், சைவசமயமே அனாதியானது என்றெல்லாம் ஆய்வுகள் வலியுறுத்துகின்றன. சைவத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான் என்றும், சிவ வணக்கம் உலகின் பல பாகங்களிலும் பரவி இருந்தது என்றும் ஆராய்ச்சிகள் நிறுவுகின்றன. சிவ வணக்கம் ஒரு காலத்தில் இந்தியா முழவதும் நிலவியதோடன்றி, சீனா, ஜப்பான், இந்துக்கடல் தீவுகள், பசுபிக் கடல் தீவுகள், ஆபிரிக்கா, பாபிலோன் (ஈராக், ஈரான், ஆப்கானிஸ்த்தான்), கிறீஸ் ஆகிய நாடுகளிலும் நிலவியது என்பது ஆய்வாளர்களின் முடிவாகும். எகிப்தில் பிரமிட்டுக்களின் சுவர்களளிலும், கீறீசில் விசா என்னுமிடத்திலும், அயர்;லாந்தில் கிறிஸ்தவ ஆலயங்களிலும், இங்கிலாந்திலும், ஸ்காட்லாந்திலும் கண்டெடுக்கப்பட்ட புதைபொருட்களிலும் சிவலிங்கங்கள் காணப்படடதாகக் கூறப்பட்டுள்ளது. ஸ்லாமியர்கள் செல்லும் புனிதத்தலமான மெக்காவில் உள்ளதும் சிவலிங்க வழிபாட்டினை அடியொற்றியது எனவும் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஆய்வுகள் நடந்த இடங்களில் சிவலிங்க வழிபாடு இருந்துள்ளமையை இன்றைய அரசாங்கங்களும், இனவாதிகளும், மதவாதிகளும் மூடி மறைத்துவிடுகின்றனர். தமிழகக் கரையோரத்தில் பூம்புகாரின் சிதைவுகளை ஆய்வு செய்ய முற்பட்டபோது அதற்கு இந்திய அரசு அனுமதி தர மறுத்ததே தமிழரின் பாரம்பரியம், அதன் வரலாற்றுக்காலம் வெளியே தெரியவந்துவிடும் என்னும் அடிப்படை நோக்கமேயாம்.

சிந்து சமவெளியில் சிவலிங்கம் காணப்பட்டுள்ளது. இங்ஙனமே யோக வடிவிலான பல உயிர்களால் சூழப்பட்ட ஆண் தெய்வச் சிலையும் காணப்பட்டது. இங்ஙனம் உலகமெல்லாம் பரவி இருந்த சைவசமயம் தமிழர்க்கே உரியதென்பதாகும். சைவத்தில் இருக்கும் ஆரியக் கலப்பால் சைவம் வடக்கிருந்து வந்தது என்பாரும் உஓ;ஓனர். ஆனால், சைவம் தமிழருடையது. பழந்தமிழர் கொள்கையே சைவசமயம் என மறைமலை அடிகள், திரு.வி.கலியாணசுந்தர முதலியார் போன்றோர் கூறியுள்ளனர்.

சைவசமயத்தின் அடிப்படைக்கோட்பாடுகளைச் சைவ சித்தாந்தம் என வழங்கப்படும். சைவத்தையும் சைவ சித்தாந்தத்தையும் பற்றி ஆய்ந்த பல மேனாட்டு அறிஞர்கள் கூறியுள்ள முடிவுகள் சைவத்தின் மேன்மையையும் தொன்மையையும் வன்மையையும் தன்மையையும் காட்டுவதாகும்.

“தென்னிந்தியாவிற்குரிய சைவ சித்ததாந்தம் தமிழர் அறிவுத்திறனால் விளைந்ததாகும். ஆது தமிழரின் தத்துவமேயாகும்” என்றார் ஜான். எச். பியட். “சைவ வழிபாடு இந்தியா முழவதும் பரவியுள்ள தொன்மை வாய்ந்த தொன்றாகும்" என்றார் திரு.பாய். “சமய உலகில் இந்தியாவிலுள்ள மிகத் தொன்மையான சமய நெறிகளின் வாரிசாகச் சைவ சித்தாந்த முறை அமைந்துள்ளது. அது தமிழரின் சமய மாகும். வேறு அனைத்தும் தமிழர்கட்டு அயன்மை உடையதாகும். பேரும்பான்மையான மக்களால் பின்பற்றப் படுவதாலும், அதன் சி;ல கூறுகளின் பழைமையினாலும், அது பிற எல்லாச் சமயங்கட்கும் மேலானதாகும்,|| என்பார் திரு. டபிள்யூ. கௌடி.

இந்தியச் சமயங்களில் சைவ சமயம் ஒன்றே கடவுள் தத்துவத்தைத் தெளிவாகவும், திட்ட வட்டமாகவும் கூறுகின்றது. எனவே, இது மிகச் சிறந்த சமயமாகக் கருதப்படுகிறது|| என்கிறார் என். மாக்னிக்கால். மேற்கண்டவை மட்டுமல்ல, மேலும் பலர் கூறியுள்ளனர். இன்னமும் ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சைவத்தினது லிங்க வழிபாடு பற்றி ஒருமித்த கருத்தில்லை. எனினும் சிந்துவெளியில் கிடைத்த சிவலிங்கம் பற்றிய ஆய்வின்படி அது திராவிடர்களுக்கு உரியது என்கிறார்கள் அறிஞர் ஈரசா, டாக்டர் சிலேட்டர் ஆகியோர். சிவலிங்க வழிபாடு சைவத்தின் அடிப்படை எனக்கொள்ளப்படுகின்றது. சைவசமத்தைப் பின்பற்றுபவர்கள் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொள்கின்றனர்.

சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை …… என வரும் திருமூலரின் மந்திரம் சிவனை முதன்மையாகக் கொண்டதே சைவம் என்னும் கூற்றினை திருமூலர் பல்லாயிரம் பாடல்களைத் தந்து நிறுவியுள்ளார். இறைவனை அடைவதற்கான வழியினை மூவர் முதலிகள் மிக நயமாக எடுத்துரைக்கின்;றனர். இந்த உலகம் உயிரும் சடமும் ஆகக் காட்சியளிக்கிறது. இக்காட்சியின் தோற்றமே படைப்பு ஆகும். ஆனல், உயிர்கள் படைக்கப் படவுமில்லை, அவை அழிக்கப்படவுமில்லை, தோற்றங்களின் வளர்ச்சியும் பரிணாமமானது. அதனை, “புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி|” என்று மாணிக்கவாசக சுவாமிகளே சிவ புராணத்தில் பாடியுள்ளார். உயிரற்ற பொருளாகிய இவ்வுலகம் காலத்தின் இறுதியில் நுண் பொருளாய்ப்பின் ஆற்றலாய் மாறி ஒடுங்கிவிடும் என்பது விஞ்ஞானம் கண்ட உண்மை. இதனையே பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய சைவத்தின் தத்துவம் கொண்டுள்ளது என்பது அதன் உண்மைத்துவத்தைக் காட்டி நிற்கின்றது.

இறைவன் தனித்து நிற்கிறான். உயிர்களிடத்தில் அவன் கலந்தும், சடப்பொருள்கள் இடத்தில் விரவியும், உள்ளான். இம் மூன்றையும் இறைவன் ஒன்றாயும், வேறாயும், உடனாயும் உள்ள நிலைகளாகவே சைவம் கொள்கின்றது. சைவ சித்தாந்தம் இதனைப் பசு, பதி, பாசம் என்பதனால் அதன் உண்மையையும் இயல்புகளையும் பல்வேறு தடை வினைகளால் விளக்குவது வியப்பிறந்த செயலாகுமென அறிஞர்கள் கூறுவர். இறைவனின் இயல்புகளாகச் சைவ சித்தாந்திகள் கூறுவது சிந்தனைக்கு உரியதாகும். இறைவனே மேலான பொருள்,

குணமும் குறியும் அவனுக்கு இல்லை. அவன் ஒருவனே ஆவான். இப்படிப் பல. சித்தாந்திகளின் சிந்தனைகள் வியப்பூட்டுவன வாகும். அறிவியல் அறிவோடு இணைந்து செல்கின்றன.

**உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**
**வள்ளற் பிரானார்க்கு வாய்க் கோபுர வாச்**
**தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே** (1823)

சைவ சித்தாந்தம் என்பது தமிழ் நாட்டில் மட்டுமே பெருவழக்காக உள்ளது. காஷ்மீரச் சைவமும், மைசூர் வீரசைவமும் பலவகையில் அதி;லிருந்து வேறுபடுகின்றன. சைவ சித்தாந்தக் கொள்கைகளைக் கூறும் மூத்த நூல்கள் யாவும் வடமொழியிலேயே உள்ளன எனச் சிலர் சொல்வர். ஆனால், மறைமலை அடிகள், கா. சுப்பிரமணியபிள்ளை அகியோர், ~~ஆதியில் வேதங்களும் ஆகமங்களும் தமிழிலும் இருந்தன, இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என இன்று வழங்கும் இதே பெயர்களோடு நான்கு வேதங்கள் இருந்தன. அவற்றுள் ஒன்றாகிய சாமவேதம் இராவணனால் பாடப்பட்டது. காலப் போக்கில் தமிழ் வேதாகமங்கள் அழிந்துவிட்டன, வடமொழி வேதாகமங்கள் நிலைத்து விட்டன. அவைகளைத் தமிழரும் தமது பிரமாண நூல்களாகத் தலைப்படடு விட்டனர், வேறு சிலர் தமிழில் மட்டுமே முன்பிருந்த வேத உபநிடதங்களை வடமொழியாளர் தம் மொழியில் பெயர்த்து எழுதிக்கொண்டனர்|| என்பர்.

ஆரியக் கடவுளர்களை நாம் வழிபடத்தொடங்க முன்னர் எம் மக்கள் மத்தியிலே நடுகல் வழிபாடு முறை நிலைத்திருந்துள்ளது. வெற்றி பெற்ற நினைவுகளை நடுகல் அறிவுறுத்தி நிற்கின்றது. "யாதும் ஊரெ யாவரும் கேளிர், தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்பது கணியன் பூங்குன்றனாரின் உன்னதமான 'தமிழியல் கருத்தை' உலகுக்குப் பறைசாற்றி நிற்கின்றது. தமிழரின் பாரம்பரிய பழக்க வழக்கத்தை, மரபு சார்ந்த ஒன்றாகக் கொள்ளலாம். தமிழர் சமயம் என்பது தமிழரின் பண்பாட்டோடு ஒட்டிப் பிறந்து வளர்ந்து வந்துள்ளது. குன்று தோறும் இருந்திடும் குமரனை வழிபடும் முறை நிலவி வந்துள்ளது. ஐயன், வன்னியிற் தெய்வம் என இன்றும் போற்றப்படும் சிவன் மிகப் புனிதமானவனாகப் போற்றப்பட்டு வந்துள்ளான். தமிழரின் துன்பத்தைக் களைந்து இன்பமான வாழ்;வினைப் பெறுவதற்க அருள்பாலிப்பவனாகப் போற்றப்பட்டு வந்துள்ளான். தமிழர் மத்தியிலே நிலவி வரும் 'ஐயன்' வழிபாடு, இன்று எம்மவர் பின்பற்றும் கேரள மாநிலத்து 'ஐயப்பன்' வழிபாட்டை ஒத்ததல்ல. ஐயனார் கோயில் என்பது சிவவழிபாட்டைக் குறித்து நிற்கின்றது. சிவனை முழுமுதற்கடவுளாக வழிபடும் முறையைக் கொண்டது சைவம்.

வெற்றிக் கழிப்பைக் கொண்டாடும் முகமாக உயிர்ப்பலி கொடுக்கப்படும் முறை தமிழர்களிடையே பின்னர் மருவி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. குதிரையைப் பலியிட்டு யாகம் செய்யும் முறை வடக்கிருந்து வந்த ஆரியப்பண்பாடாகும். 'ஆஸ்வமேத யாகம்' போன்ற விலங்குகளை கொன்று அதன் இறைச்சியைப் படைத்து உண்டு கழிக்கும் முறை பிற்காலத்தில் வேள்வியாக மாறியுள்ளது. தீபாவளித் தினத்தில் மாமிசம் உண்டு கழித்தல் திராவிட மக்களிடம் காணப்படும் ஒரு வழக்கமாக உள்ளது. 'இறைவனை அன்பருக்கு அன்பன்' எனப் போற்றித்துதித்தனர். அன்பு மிகுதியால் இரக்க சிந்தையால் 'கண்ணை இறைவனுக்கே தானம் செய்வதா் 'கண்ணப்ப நாயனார்'. முனித பண்பாட்டுவளர்ச்சியில் விலங்குணவு ஆரம்ப காலங்களில் தவிர்க்கமுடியாதபடி இடம்பெற்றுள்ளது. ஆனால் சைவசமயத்தைப்போற்றும் தமிழ் மக்களின்

பாரம்பரியத்தோடு எப்படி ஒட்டிக்கொண்டது என்பது கேள்விக் குறியே. சிந்துவெளி நாகரிகம் தரும் சான்றுகள் சிவலிங்க வழிபாட்டுமுறை, மாடுகளின் உபயோகம் என்பனவும் பெண் தெய்வ வழிபாட்டிற்கான சான்றுகளும் இடம்பெற்றுள்ளன எனக் கொள்ளக் கிடக்கின்றது. ஆனால் சிவலிங்க வழிபாடு நடுகல் வழிபாட்டு முறைமையை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்த்pருத்தல் கூடும். சிவ லிங்கம் மனித உருவமற்ற வழிபாட்டு முறையினைக் குறித்து நிற்;கின்றது. சிவனை அருவமும், உருவமும் ஆனாய் போற்றி என மணிவாசகர் பாடுமாற்றல் அதனை உணர்ந்து கொள்ளலாம். உருவமற்றவன் இறைவன் என்பதும் அவன் சோதி வடிவினன் என்பதும் முன்வைக்கப்படுகின்றது. ஸ்லாமியர், கடவுளை யாரும் காணமுடியாது என்பதனை ஒத்ததே அடிமுடி தேடிய வரலாறு. இறைவனைக் கண்டவரும் இல்லை விண்டவரும் இல்லை என்கின்றது சைவம். அருவமும் உருவமும் ஆனாய் போற்றி என மணிவாசகர் இறைவனை பிரார்த்திக்கின்றார். மனிதனுள் சிவத்தைக் காண்கின்றது சைவம். திருமூலர் இதனை மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றார். “சிவன்முதல் மூவரோ டைவர் சிறந்த…..” எனவரும் திருமந்திரத்தில் தென்னாடு உடைய சிவனே போற்றி என்பதன் வழி சிவனுக்கான முதன்மை தென்னாட்டைச் சார்ந்தே எழுந்துள்ளது. வடக்கே வைணவம் எழுச்சியுற்ற போதும் சைவம் நலிவடையாது பாதகாக்கப்பட்ட பூமி தமிழகந்தான். தமிழனின் முழுமுதற் கடவுள் சிவம் என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமே இல்லை.

- **ஆக்கம்: த.சிவபாலு பி.இடி.சிறப்பு. எம்.ஏ.**

## தியானம்

திருமூலநாயனாரால் அருளிச்செய்யப்பட்ட திருமந்திரத்திலும், பதஞ்சலி முனிவரால் இயற்றப்பட்ட யோகசூத்திரத்திலும் அட்டாங்க யோகம் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன எட்டு அங்கங்களாகும். கொல்லாமை, பொய்கூறாமை, கள்ளாமை, பிரமச்சாரியம், பொறையுடமை, அவா இல்லாமை, இரக்கம், நடுநிலைமை, பகுத்து உண்ணல், தூய்மை ஆகிய பத்து அவயவங்களை இயமத்தி லும், தவம், ஜெபம், சந்தோஷம், ஆத்திகம், தானம், விரதம், சத்சங்கம், குற்றமுணர்தல், இறைஅர்ப்பணிப்பு, நற்சிந்தனைகளை நியமத்திலும் திருமூலர் கூறி உள்ளார்.

ஆசனம் என்பது தியானப் பயிற்சிகள் செய்வதற்கு சுகாசனம், பத்மாசனம் போன்ற நிலைகளில் வசதியாக நீண்டநேரம் இருக்கையில் இருத்தல் ஆகும். இடகலை, பிங்கலை, சுழுமுனை எனும் பிரதான நாடிகளை அறிந்து இவைகள் மேல் மனதைச் செலுத்தி மூச்சுப் பயிற்சி செய்து மன, உடல் வலிமையை ஏற்படுத்துதல் பிராணாயாமம் என்பதாகும். மனதை உள்முகமாக செலுத்தி ஆறு ஆதாரங்கள் மீதும் நிறுத்திப் பழகுவது பிரத்தியாகாரம் ஆகும். இந்த நிலையில் தொடர்ந்து இருத்தல் தாரணையாகும். தியானம் என்றால் ஐம்புலன்கள், அந்தக்கரணங்கள் என்பவற்றிலிருந்து விடுபட்டு இறை சக்தியை அனுபவித்தல் ஆகும். சைவசித்தாந்தம் கூறும் பரமுக்தி அதாவது இறைவனுடன் அத்துவிதமாகக் கலத்தல் சமாதியாகும்.

தியானம் செய்வதால் மனதின் அலைபாயும் தன்மை குறைவதால், உள் உறுப்புகள் தூண்டப்பெற்று ஆரோக்கிய வாழ்வும் நோய் எதிர்க்கும் ஆற்றலும் கூடும். அத்துடன் ஞாபகசக்தி, பொறுமை, சாந்தகுணம், கவனிக்கும் ஆற்றல், விழிப்புணர்வு, கடமைகளைச் சரிவரச் செய்தல், நடுநிலைமை, பரிந்துணர்வு, ஈகை, இரக்கம் போன்ற நற்குணங்கள் மேலோங்கும். ஆழ்நிலை தியானத்தின்போது தன்னைத் தானே குணமாக்கும் சுவாசவிகிதம், இரத்த அழுத்தம், இதயத் துடிப்பு சமநிலைப்படுத்தப்பட்டு நோயற்ற வாழ்வுடன் இறைநிலை அடையலாம். தியானம் செய்யும்போது பல விசித்திர அனுபவங்களைப் பெறமுடியும் என்று அருளாளர்கள் கூறுவார்கள்.

மாணிக்கவாசக சுவாமிகள் சிவபுராணத்தில் அருளியதுபோல ஓரறிவான புல், மரங்கள் தொடக்கம் புழு, பறவை, மிருகங்கள், தேவர்கள், கணங்கள், கல்லாய் பரிணாமம் அடைந்து இன்று ஆறறிவு படைத்த மனிதனாக மனத்துடன் வளர்ந்து உள்ளோம். எமக்குப் பலநேரங்களில் மிருகங்களுக்கு உரிய குணங்கள் வந்து போவதற்கு எமது கருமையத்தில் உள்ள பதிவுகளே காரணம். மனம் என்பது மூன்று வயது தொடக்கம் ஐம்பொறிகளால் அறிந்து ஐம்புலன்களால் பதியப்பட்ட எண்ணங்களின் தொகுப்பேயாகும். இது உயிரின் படர்க்கை நிலையென்று ஆன்றோர்கள் கூறுவார்கள். மனம் உயிர்ச் சக்தியுடன் சேர்ந்து கட்டுப்பாடற்று இயங்கிக்கொண்டே இருக்கும். மன அலைகளின் எழுச்சி நிலைகள் பீற்றா நிலையில் இருக்கும்போது மிருகக் குணங்கள் கூடுதலாகவும், அல்பா நிலையில் மாமனிதர்களாகவும் டெல்ரா நிலையில் இறையுணர்வுடனும் காணப்படும். சாதாதாரண நிலையில் ஒருவருக்கு 60 தொடக்கம் 72,000 எண்ணங்கள் தினமும் தோன்றி மறைகின்றன. இதனால் உடல் களைப்படைகிறது.

இறைவனால் கொடுக்கப்பட்ட தூக்கம் என்ற ஓய்வின் பின்பு உடல் சுறுசுறுப்பை மீண்டும் பெறுகிறது. சொற்பன நிலை கடந்து ஆழ்நிலை தூக்கத்தின் போது (துரியாதீதம்) பிரபஞ்ச சக்தியைப் பெற்று புத்துணர்வு பெறுகிறது. சிவஞானபோதம் நான்காம் சூத்திரத்தில் குறிப்பிட்டபடி உயிரானது மனித உடலில் மூலாதாரம், மணிப்பூரகம், சுவாதிஷ்டானம், விசுத்தி, அனாகதம் ஆகிய ஐந்து ஆதாரங்களில் இருந்து ஐந்து அவத்தைகளுடனும் குறிப்பிட்ட தத்துவங்களுடனும் தொழிற்படுகிறது.

மனம் சூக்கும சரீரத்தில் மனோமய கோசத்தில் பரந்து விரிந்து காணப்படுகிறது. தூல சரீரத்தில் ஒவ்வொரு அணுவில் உயிரியல் காந்தசக்தியாகக் காணப்படுகிறது. மனம் எப்போதும் கடந்த காலத்தை அல்லது எதிர்காலத்தை எண்ணித் துன்பப்பட்டு அல்லது சந்தோசப்பட்டுக் கொண்டே இருக்கும். மன அலைகளைக் குறைத்து தியானப் பயிற்சி செய்வதற்கு சித்தர்கள், யோகிகள், ஞானிகள், அருளாளர்கள், முனிவர்கள் பல வழிகளைப் பரிந்து உரைத்து வருகிறார்கள். நிர்க்குண (ஜோதி வழிபாடு), சகுண (மூர்த்தி), குண்டலினி, துரிய, நவக்கிரக, பஞ்சபூத, வள்ளலாரின் கண்ணாடி, பிரமிட், புருவமத்தி, உடலை உணர்தல் தியான வகைகளுடன், மூச்சை அவதானித்தல், நல்ல இசைகளைக் கேட்டல், இயற்கையுடன் ஒன்றியிருத்தல், மந்திர ஜெபம், ஆலய வழிபாடு போன்றவற்றையும் குறிப்பிடலாம். அமைதியான ஓர் இடத்தில் வசதியாக நிமிர்ந்து, உடலைத் தளரவிட்டு கண்களை மூடி உட்கார்ந்து தியானப் பயிற்சியை ஆரம்பிக்கலாம். கைவிரல்களில் சின் முத்திரை (பெருவிரல் நுனி, ஆட்காட்டிவிரல் நுனியைத் தொட்ட படி) அல்லது கை விரல்களைக் கோர்த்தபடி அல்லது இடது கையின்மேல் வலது கையை வைத்து (சிவன் நிஷ்டையில் இருப்பதுபோல்) தியானத்தை ஆரம்பிக்கலாம். பொருத்தமற்ற எண்ணங்கள் வந்தால் நல்லவற்றின் மூலம் முதலில் பிரதிபண்ணவேண்டும். பின்பு மூக்கு நுனியில் சுவாசத்தை

அவதானித்து உடலின் ஒவ்வொரு பாகத்தையும் உணர வேண்டும். இவற்றை நல்ல குரு மூலம் கற்பது சிறந்தது.

நாம் அன்றாடம் செய்யும் அனைத்துக் காரியங்களையும் ஓர் விளிப்புணர்வுடன் செய்வதே பெரிய தியானமாகும். உதாரணமாக சாப்பிடும்போதும், குளிக்கும்போதும் நித்திரை கொள்ளும்போதும், படிக்கும்போதும் நடக்கும்போதும் மனம் ஒன்றித்து விளிப்புணர்வுடன் செய்யப் பழக வேண்டும். பெறுதற்கரிய இம்மானிட தேகத்தை பெற்ற யாம் மனதை, சுவாசத்தை உயிரை ஒன்றின்மீது நிலைநிறுத்தப் பழகி ஜீவாத்மாவை ஆத்மார்த்தமாக உணர்ந்து சைவசித்தாந்தம் கூறும் பத பரமுக்தியைப் பெறுவதற்கு எல்லம் வல்ல இறையருளை வேண்டி நிற்போமாக.

ஓம் நமசிவாய!

**ஆக்கம்: ஏழூர்நாயகம் ஆனந்தவேல்**

உ

சிவமயம்

# சந்தியாவந்தனம்

காலை, இரவு ஆகிய காலங்களின் சந்திப்பில் செய்யப்படும் கடவுள் வழிபாடு சந்தியா வந்தனம் எனச் சொல்லப்படும். இது சூரியனை வழிபடுதலாகும். நாம் அன்றாடம் தெரிந்தோ தெரியாமலோ செய்யும் பாவங்களை மன்னித்து நல் வாழ்க்கை வாழ்வதற்கு ஆண்டவனிடம் பிரத்திப்பதே சந்தியாவந்தனத்தின் உள்பொருளாகும்

செய்யும் முறை:

1. ஆசமனம்: கடவுளைத் தியானித்து சிறிது நீரை உள்ளங்கையில் விட்டு அருந்தவும்
2. மார்ஜனம்: உடலையும் மனத்தையும் தூய்மைபடுத்தல் வேண்டி சிறிது நீரை உடலில் தெளிக்கவும்.
3. அகமர்சனம்: முற்பிறவிகளில் செய்த பாவத்திற்கு பிராயச் சித்தமாக வேண்டுதல்
4. சூர்ய அர்ட்யம்: சூரிய பகவானைக் குறித்து பிராத்தனை செய்து நீர் தெளித்தல்.
5. பிரணாயமம்: அலையும் மனதைக் கட்டுப்படுத்தி மூச்சுப் பயிற்சி செய்து காயத்திரி மந்திரத்தைப் பாராயணம் செய்தல்.
6. உபஸ்தானம்: கருணையும் அருளும் வேண்டி சூரியபகவானிடம் வேண்டுதல்

**தொகுப்பு: சண்முகம் நடராசா**

**வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது நாதன் நாமம் நமச்சி வாயவே.**

# சுந்தரருக்குப் பிடித்த தூதுவளைக்கறி

**சூதம் பயிலும் பொழில்அம்பரில் தூய வாய்மை**
**வேதம் பயிலும் மறையாளர் குலத்தின் மேலோர்**
**ஏதம் புரியும் எயில்செற்றவர்க் கன்பர் வந்தால்**
**பாதம் பணிந்தார் அமுதூட்டுநற் பண்பின் மிக்கார்.**

அறுபத்துமூவருள் ஒருவராக எண்ணப்படும் சோமாசிமாறனார் தமிழ் நாட்டில் திருவம்பர் என்னும் ஊரில் பிறந்த ஓர் அந்தணர். சிவனடியார்கள் எவராயிருப்பினும் பாரபட்சம் காட்டாது அவர்களை ஆர்வமுடன் வரவேற்று உபசரித்து அனுப்புவது அவரது வழக்கம். சிவனடியார்களுக்குத் தொண்டுசெய்வதுடனும் சிவன்கோவில்களுக்குச் சென்றுவழிபடுவதுடனும் நின்றுவிடாது சிவபிரானை முதல் விருந்தினராகப் போற்றிச் செய்யும் சிவவேள்விகளை செய்வதிலும் பெருவிருப்பு உடையவராக இருந்தார்.

சோமாசிமாறனார் ஒருமுறை திருவாரூர்க் கோயிலுக்குச் சென்றிருந்தபோதுதான் அவரது வாழ்நாளில் மறக்கமுடியாத ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அங்குதான் தம்பிரான் தோழர் என அறியப்பட்ட சுந்தர்மூர்த்தி நாயனாரையும் அவரது மனைவியாராகிய பரவையாரையும் நேரில் சந்தித்து உரையாடும் பெரும்பேறு சோமாசி மாறனுக்குக் கிடைத்தது. இந்தச் சந்திப்பின் மூலம் தாம் வாழ்நாள் முழுவதும் எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஓர் அற்புத நிகழ்வு நடைபெறக்கூடிய வாய்ப்பு கிடைத்துள்ளதாக சோமாசிமாறனார் நம்பினார்.

சிவபிரானுக்கு உரிய வேள்விகளைத் தொடர்ந்து செய்துவந்த சோமாசிமாறனுக்கு வேள்வித்தீயில் தாம் சமர்ப்பிக்கும் நைவேத்தியப் பொருள்களை ஒருமுறையேனும் சிவபிரானே நேரில்வந்து பெற்றுக்கொள்ளவேண்டும் என்னும் பேராசை இருந்தது.

தனது பக்திக்கு இரங்கி சிவபெருமான் நேரில் வருவார் என்பதில் சோமாசிக்கு நம்பிக்கை இல்லை. எனினும் சுந்தரரினதும் பரவையாரினதும் அறிமுகம் கிடைத்தபின்னர் தமது ஆசை நிறைவேறக்கூடிய சாத்தியம் இருப்பதாக அவர் நம்பினார். தம்பிரான் தோழரான சுந்தரமூர்த்திநாயனார் அழைத்தால் சிவபிரான் நிச்சயம் வருவார் என்பதில் இவருக்குச் சந்தேகமே இல்லை. எனவே முதலில் சுந்தரரைத் தனது நண்பராக்கிக் கொள்ள விரும்பினார். சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் தூதுவளைக்கீரை மிகவும் பிடித்த கறி என்பதை சுந்தரரின் மனைவியான பரவையார் மூலம் அறிந்துகொண்டார். தூதுவளைக்கீரையை மூலம் நட்பை வளர்க்கலாம் என்று தீர்மானித்தார். நாள்தோறும் தவறாமல் தூதுவளைக்கீரை பறித்துப் பரவையாரிடம் கொடுத்துவந்தார். பரவையாரும் அதைப்பக்குவமாய்ச் சமைத்து சுந்தரருக்குப் பரிமாறிவந்தார்.

ஆற்றைக்கடந்துவந்துதான் பரவையாரிடம் தூதுவளையைகொடுக்க வேண்டியிருந்தது. ஒரு நாள் ஆற்றில் வெள்ளம்பெருகிவிட்டதால் சோமாசிமாறனால் ஆற்றை நீந்திக்கடக்கமுடியாமல் போய்விட்டது. அன்று சுந்தரருக்குத் தூதுவளைக் கறி கிடைக்கவில்லை. அப்பொழுதுதான் சோமாசி மாறன் என்னும் பிராமணர் ஒருவர் தினமும் தூதுவளை கொண்டுவந்து கொடுக்கும் விடயம் சுந்தரருக்குத் தெரியவந்தது. இப்படித்தான் சோமாசிமாறனார் சுந்தரருக்கு நண்பரானார்.

ஒருமுறை சுந்தரரோடு உரையாடக் கிடைத்த தருணத்தில் தாம் அடுத்துச் செய்யவிருக்கும் சிவவேள்வியின்போது சமர்ப்பிக்கப்படும் நைவேத்தியத்தைச் சிவபிரானே நேரில்வந்து

பெற்றுக்கொள்ளவேண்டும் என்னும் தமது பெருவிருப்பத்தைச் சுந்தரரிடம் தெரிவித்தார் சோமாசியார். அப்போது உமக்காக இறைவனிடம் கேட்டுக் கொள்கின்றேன் என்று வாக்குக்கொடுத்த சுந்தரர் அவ்வாறே தமது நண்பரின் வேண்டுதலை இறைவனிடம் சமர்ப்பித்தார். சிவபிரான் அடியாரது வேண்டுதலை ஏற்றுக்கொண்டு தாம் வேள்விக்கு நேரில் வருவதாக ஒப்புதல் அளித்தார். ஆனால் அதற்கு ஒரு நிபந்தனை போட்டார். நான் வேள்விக்கு வருகின்றேன். ஆனால் எப்போது வருவேன் எந்த வடிவத்தில் வருவேன் என்று சொல்லமாட்டேன். அவராகவே என்னை அறிந்துகொள்ளவேண்டும் என்பதை சோமாசிமாறனிடம் தெரிவித்துவிடுமாறு சிவபிரான் கூறிவிட்டார்.

ஒரு சுபமுகூர்த்த நாளில் வேத விற்பன்னர்கள் புடைசூழ சோமாசி மாறனார் வேள்விச் சடங்குகளை நடத்திக்கொன்டிருந்தார். உச்சிவேளை நேரத்தில் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த கணவனும் மனைவியும் இருபிள்ளைகளும் கூடவே நான்கு நாய்களுடன் யாகசாலைக்குள் நுழைந்தனர். அந்தப்பெண் தனது தலையில் கள் நிறைந்த குடம் ஒன்றைச் சுமந்திருந்தாள். இவர்களைக்கண்டதும் அங்கு கூடியிருந்த பிராமணர்கள் அனைவரும் வேகமாக யாகசாலையைவிட்டு வெளியேறி ஊருக்கு வெளியே ஓடினர். சோமாசி மாறனாரோ தாம் இருந்த இடத்தை விட்டு அசையவில்லை.

அங்குவந்த குடும்பத் தலைவனுக்குத் யாகத்தில் படைத்து வைத்த பொருள்களைத் தானமாக வழங்கினார். அந்தக் கணமே கணவனும் மனைவியும் இருபிள்ளைகளும் அவர்களின் நாய்களும் மறைந்துவிட்டனர். சோமாசிமாறநாயனாரின் வேண்டுதல் பலித்தது. இறைவனின் அருள் அவருக்கு முழுமையாகக் கிடைத்தது.

ஊருக்கு வெளியே ஓடிச்சென்றிருந்த பிராமணர்கள் திரும்பிவந்தபின் நடந்த சம்பவத்தை அறிந்து தம்மைத்தாமே நொந்துகொண்டனர். இறைவனே நேரில் வந்தபோது தாம் ஊருக்குவெளியே ஓடிய பாவத்தைத் தீர்க்கவேண்டி அன்றுமுதல் ஒவ்வொரு நாளும் உச்சிவேளையில் ஊருக்கு வெளியே செல்லும் வழக்கத்தை நெடுங்காலமாகப் பின்பற்றிவந்தனர்.

சிவபெருமானிடம் தூது போவதற்காகத் தம்பிரான் தோழரான சுந்தரமூர்த்தி நாயனாரை வளைக்க உதவியதால் இந்தக்கீரைக்குத் தூதுவளை என்ற பெயர் ஏற்பட்டதாக ஒரு கதை உண்டு.

**ஆக்கம்: முனைவர் பால. சிவகடாட்சம் Ph.D (London)**
**முன்னாள் சிரேட்ட விரிவுரையாளர், துறைத்தலைவர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**நற்ற வாவுனை நான்ம றக்கினுஞ் சொல்லும் நாநமச்சி வாயவே.**

# உலகையே மிரள வைத்த திருநள்ளாறு கோவில்!

நாசாவுக்கே தண்ணிகாட்டிய திருநள்ளாறு! இன்று பல நாடுகள் செயற்கை கோள்களை விண்வெளிக்கு அனுப்பி வருகின்றன. அவற்றில் செல்போன் பயன்பாடு, ராணுவ பயன்பாடு, உளவு என பல்வேறு காரணங்களுக்காக பயன்படுத் தப்படுகிறது. சில வருடங் களுக்கு முன்பு அமெரிக்க செயற்கைகோள் ஒன்று பூமியின் குறிப்பிட்ட பகுதி யை கடக்கும் பொது மட்டும் 3 வினாடிகள் ஸ்தம்பி த்து விடுகிறது.

3 வினாடிகளுக்கு பிறகு வழக்கம்போல் வானில் பறக்க ஆரம்பித்து விடுகிறது. எந்தவித பழுதும் அதன் செயற்கை கோளில், அதன் கருவிகளில் ஏற்படுவதில்லை. இந்த சம்பவம் நாசாவிற்கு அதிர்ச்சி கலந்த ஆச்சரியதயை அளித்தது. இது எப்படி சாத்தியம்??? – என்பதை ஆராய்ந்து, கிடைத்த முடிவு நாசாவை மட்டுமல்ல, உலகையே மிரள வைத்தது.

ஆம்! எந்த ஒரு செயற்கைகோளும் பூமியில் இந்தியாவின்-தமிழ்நாடு அருகில் உள்ள புதுச்சேரி- திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பநேஷவரர் கோவிலுக்கு மேல் நேர் உள்ள வான்பகுதியை கடக்கும் 3 வினாடிகள் மட்டும் ஸ்தம்பித்து விடுகின்றன.

அப்படி நிகழ்வதற்கு என்ன காரணம் ???

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வினாடியும் கண்ணுக்கு தெரியாத கருநீலகதிர்கள் அந்த கோவிலின் மீது விழுந்துகொண்டே இருக்கிறது.இரண்டரை வருடங்களுக்கு ஒரு முறை நடக்கும் சனி பெயர்ச்சியின் போது  இந்த கருநீல கதிர்களின் அடர்த்தி மிகவும் அதிகமாக இருக்கும். விண்வெளியில் சுற்றி கொண்டிருக்கும் செயற்கை கோள்கள் இந்த கரு நீலகதிர்கள் பாயும் பகுதிக்குள் நுழையும்போது ஸ்தம்பித்துவிடுகின்றன. அதே நேரத்தில் செயற்கைகோள்களுக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படுவதில்லை.

இதில்குறிபிடத்தக்க அம்சம் என்னவென்றால் இந்த கோவில்தான் இந்துக்களால்‘சனி பகவான்’ தலம் என்று போற்றப்படுகிறது. இந்த சம்பவத்திற்கு பிறகு நாசாவிலிருந்து பல முறை திருநள்ளாறு வந்து ஆராய்ச்சி செய்து விட்டனர். மனிதனை மீறிய சக்தி உண்டு என்பதை உணர்ந்தனர். அவர்களும் சனிபகவானை கையெடுத்துகும்பிட்டு உணர்ந்தனர். இன்றுவரை விண்ணில் செயற்கை கோள்கள் திருநள்ளாறு பகுதியை கடக்கும் பொது ஸ்தம்பித்து கொண்டே இருக்கிறது.”

இந்த செய்தியை கேட்டு பிரமிக்காதவர்கள் நம்முடைய முன்னோர்களை நினைத்து கட்டயம் பிரமிக்கவேண்டும். நாம் பல செயற்கை கோள்கள் கொண்டு கண்டறியும் சனிகோளின் கதிர்வீச்சு விழும் பகுதியை கண்டு பிடித்து அதற்கென ஒரு கோயிலையும் கட்டி, கதிர் வீச்சுகள் அதில் விழும் நாட்களையும் கணக்கிட்டு அதற்க்கான நாளை சனிபெயர்ச்சி என்று அறிவிக்கும் திறமையை, நம்மால் நினைத்துக்கூட பார்க்கமுடியாத ஒரு தொலைநோக்கு பார்வை கொண்ட நம் முன்னோர்களை நினைத்து பிரமிக்காமல் இருக்க முடியவில்லை.

- **தகவல்: சின்னத்துரை பஞ்சாட்சரம்**
-

# இந்து மதம்

உலக சமயங்கள் அனைத்திலும் மிகவும் பழைமையானாது இந்து மதம். இதன் பழம்பெயர் “சனாதனதர்மம்”. இந்து மதம் சரித்திரம் முக்கியத்துவமான ஒருதனி மனிதனாலோ அல்லது சமயக்குரவர்களாலோ தோற்றுவிக்கப் பட்ட மதம் அல்ல. எப்பொழுது யாரால் எந்தக் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டதென்று ஆய்ந்துணர முடியாத தொன்மைச் சிறப்பு வாய்ந்த மதமாகும். இந்தக் காரணத்தினால் இறைவனே மனித சமுதாயத்திற்க்காக அளித்த வழிகாட்டி அல்லது. ஒரு நெறி. இந்து மதம் என்ற கருத்து பொதுவாக நிலவிவருகிறது. மக்களுக்கு வழிகாட்டு முறையிலும் சமயக் கொள்கையைக் கடைபிடிப்பதிலும் இந்து மதம் அதிக சுதந்திரம் கொடுத்திருக்கிறது. மதக்கோட்பாடுகளும் முடிவில்லா வேறுபாடுகளைக் கொண்டிருக்கிறது. இவ்வேறுபாடுகள் யாவும் இந்து மதத்திற்கு அணிகலன்களே.

பல பெயர்களால் வழிபட்டாலும் இறைவன் ஒருவரே என்பதுதான் இதன் அடிப்படைக் கொள்கை. இந்து மதத்திலே உருவ வழிபாடும் வழிபாட்டிலும் பஞ்ச பூதகங்களின் முக்கியத்துவம் உணர்த்தப்படுகின்றன. பசுக்கள் பல நிறங்களானாலும் அவற்றில் பெறப்படும் பால் வெண்மையாக இருக்கிறது போன்று வழிபடும் முறைகள் பலவகையாக இருந்தாலும் ஒரே இறைவனிடம் நம்மை அழைத்துச் செல்கின்றன என்று உபநிடதம் கூறுகின்றது. இந்து மதத் தத்துவத்தின் சிறப்பு, அழகு, உயர்வு இவையாவும் அது உயர்ந்த எத்தகைய கருத்துக்களையும் ஏற்றுக் கொள்ளும் தன்மையில் அடங்கியுள்ளன. ஆனால் இந்து மதத்திற்குப் பொதுவான குறிக்கோள் இல்லை என்று கருதக் கூடாது. இது தனித்தன்மையுடன் கூடிய ஒரு மதமாக இருப்பதால்தான் இந்நாள்வரை இந்து மதம் நிலைத்து நிற்கிறது.

இந்து மதத்தில் மூன்று முக்கியமான பிரிவுகள் 1. புராணம் (mythology) 2. சடங்கு (rituals) 3. தத்துவம் (philosophy). தத்துவம் – ஞானாம்சம்: அதாவது எடுத்த எடுப்பில் எல்லோராலும் புரிந்து கொள்ளமுடியாது. சடங்கு- கர்மாம்சம்: அன்றாட வாழ்வில் நெறிமுறைகளோடு வாழ்வதற்கு உருவாக்கப்பட்டது. புராணம்- கதையம்சம்: புரிதற்கரிய தத்துவங்களைக் கதைகள் மூலம் மக்களுக்கு எடுத்துரைப்பது. எண்ணற்ற தெய்வ உருவங்கள் இருப்பது அடிப்படையில் தெய்வம் ஒன்றே. பல்வேறு மனப்பக்குவத்திற்கேற்ப சடங்குகள் அமைகின்றன.

தத்துவத்தை விளக்குவதற்காகவே சடங்குகள் எழுந்தன. சாதாரண மக்களுக்கு சமயத்தில் பிடிப்பை ஏற்படுத்துவதற்கு சடங்குகள்தான் முக்கியமாக உள்ளன. சடங்குகளும் விரதங்களும் ஆரம்பநிலை. தத்துவம் இறுதிநிலை. சாதாரண மக்களுக்கு சடங்குகளின் பின் உறையும் தத்துவத்தைப் புகட்டுவது கற்றவர்களின் கடமையாகும். நெறிமுறையான வாழ்விற்கு யாகங்கள், தானங்கள், விரதங்கள், அனுட்டானங்கள், தவங்கள், ஜபங்கள் பெரிதும் உதவுகின்றன. இவற்றைக் கைப்பிடித்தால் மனிதன் தூய்மையடைகிறான்.

- **ஆக்கம்: சண்முகம் நடராசா**

# சிவ அர்ச்சனையில் வில்வம்

வில்வம் சிவபெருமானின் தலவிருட்சம் ஆகும். இவ்விருட்சத்தைப் பூஜிப்பவர்கள் சகல நன்மைகளும் பெறுவார்கள். வில்வ இலைகள் சிவனின் திரிசூல வடிவத்தையும் இறைவனின் முக்குணங்களையும் குறிப்பதாக விளங்குகின்றன. மகா சிவராத்திரி நாளில், வில்வாஷ்டகம் பாராயணம் செய்து, வில்வம் சார்த்தி சிவனை பூஜித்தால், நம்முடைய ஏழேழு ஜென்மத்துப் பாவங்களும் விலகும் என்பது ஐதீகம்.

வில்வங்களில் மகாவில்வம், கொடி வில்வம், சித்த வில்வம், கற்பூர வில்வம் உள்பட 21 முக்கிய வகைகள் உள்ளன. வில்வத்துக்கு கூவிளம், கூவிளை என்பவை உள்பட பல பெயர்களும் உண்டு. வில்வ இலைகள் மூன்று தளம், ஐந்து தளம், ஏழு தளங்களாக இருப்பதை காணலாம். பெரும்பாலும் மூன்று இலைகளுடன் இருப்பதை வில்வ தளம் என்பார்கள். சிவனை மகிழ்ச்சிப்படுத்த ஒரே ஒரு வில்வதளம் போதும் என்பார்கள். மூன்று இலைகள் கொண்ட வில்வதளம் சிவபெருமானின் மூன்று கண்களைக் குறிப்பதாக சொல்வார்கள்.
வில்வமானது பாதிரி, வன்னி, மந்தாரை, மா ஆகிய மரங்களுடன் தேவலோகத்தில் இருந்து வந்த "பஞ்ச தருக்கள்" என்ற சிறப்பைப் பெற்றது. எனவே சிவார்ச்சனைக்கு மற்ற மலர்கள், இலைகளை விட வில்வ தளங்களை பயன்படுத்தினார்கள். வில்வம் இத்தகைய முக்கியத்துவத்தை பெற்றதால் "சிவமூலிகைகளின் சிகரம்" என்றழைக்கப்படுகிறது. மூன்று இலைகளைக் கொண்ட வில்வ தளத்தை சிலர் தனி தனியாக கிள்ளி பிரித்து விடுவதுண்டு. அப்படி செய்யக்கூடாது. சிவபூஜை சமயத்தில் வில்வத்தால் அர்ச்சனை செய்தால் தீய சக்திகள் விலகும். தோஷங்கள் ஓடோடி விடும் என்பார்கள். ஒரு வில்வ தளத்தை சிவனுக்கு அர்ப்பணம் செய்தால், மூன்று ஜென்ம பாவங்கள் விலகும் என்று புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனெனில் ஒரு வில்வ தளம் என்பது லட்சம் சொர்ண பூக்களுக்கு சமமானது. சிவனுக்கு வில்வ இலைகள் மிகவும் பிடிக்கும் என்பதால் சிலர் வில்வ இலைகளைக் கொண்டு சிவனுக்கு லட்சார்ச்சனை, கோடி அர்ச்சனை செய்வார்கள்.

பூஜைக்குப் பயன்படுத்துகிற வில்வத்தை,சூரியோதயத்துக்கு முன்னதாகவே பறித்து வைத்துக் கொள்ள வேண்டும். சிவனுக்கு அர்ச்சனை செய்வதற்கு தேவையான வில்வத்தை மாதப்பிறப்பு, சோமவாரம், அமாவாசை, பௌர்ணமி, சதுர்த்தி, அஷ்டமி, நவமி, ஆகிய நாட்களில் பறிக்கக் கூடாது. மேலும் வில்வத்தைப் பறித்து ஆறுமாதம் வரை வைத்திருந்து பூஜை செய்யலாம். உலர்ந்த வில்வம் மற்றும் பூஜித்த வில்வம் முதலியவற்றாலும் பூஜை செய்யலாம். சிவ அர்ச்சனையில் வில்வ அர்ச்சனை கோடி புண்ணியம் தரவல்லது.

சிவாலயங்களில் உள்ள லிங்கத்தில் இருந்து, இந்த பிரபஞ்சத்தில் நிறைந்துள்ள பேரியக்க சக்தி வெளிப்பட்டுக் கொண்டே இருக்கிறது. அந்த சக்தி அதிர்வுகளை ஏற்படுத்தும் ஆற்றல் கொண்டது. இதனால்தான் பழமை சிறப்புமிக்க ஆலயங்களுக்குள் நாம் செல்லும்போது அந்த அதிர்வை உணர முடியும். வில்வத்தினுடைய அதிர்வுகள் நாம் சிவன் என்று கருதுவது தான் அதன் சிறப்பு . ஏனென்றால் அதன் மூலமாகத் தான் நாம், தெய்வீக சக்திகளுடன் தொடர்பு வைத்துக் கொள்ள முடியும்.

வில்வமரம் நெருப்பு அம்சம் (பனி கட்டி) உடையது. இதில் உள்ள ரசாயனம் உடலில் உள்ள நச்சு பொருளை அழிக்கும் தன்மைகளை உடையது. சிவ மந்திரம் சொல்லும்பொழுது உடல் சூடாகும் ஆன்மா விழித்து எழும் இப்படி நடக்கும் பொழுது உடலை சீர் செய்ய வில்வம் இலை

உதவி செய்யும். சிவ பெருமான் தொழிலே தவறான செயல்களை அழிப்பது தான். நடராஜ தத்துவமும் இதைத்தான் செய்கிறது. அவருடைய தியானம் அதற்கு சக்தி பெறும் செயல். கருவறையில் சொல்ல படும் மந்திரத்தால் வெப்பம் மிகும். இதனால் உடல் சீர் நிலை மாறும் இதை சரி செய்ய வில்வ இலையால் முடியும்.

சிவபெருமானுக்கு உரிய நட்சத்திரம் திருவாதிரை. இது கடும் வெப்பத்தைக் கொடுக்கக் கூடியது. இதனால் ஈசனை சாந்தப்படுத்தவும், குளிர்ச்சிப்படுத்தவும் முனிவர்கள், ரிஷிகள் வில்வ தளத்தை பயன்படுத்தினார்கள். வில்வம் குளிர்ச்சியூட்டும் குணமுடையது. வில்வ தளங்களால் ஈசன் குளிர்ச்சியை பெற்றார். எனவேதான் வில்வம், சிவபெருமானுக்கு பிடித்தமானதாக மாறியது. வில்வ இலைகளுக்கு மற்றொரு சிறப்பும் உண்டு. இதை உண்டால் நமது உடலில் இருந்து அதிக சக்திகள் வெளியாகாது.

பாற்கடலில் இருந்து லட்சுமிதேவி தோன்றிய போது அவளது கரங்களில் இருந்து வில்வ மரம் தோன்றியதாக வராக புராணத்தில் கூறப்பட்டுள்ளது. எனவே வில்வ மரத்தை மகாலட்சுமியின் வடிவமாக கருதுகிறார்கள். இதனால் வில்வ மரத்தை வழிபட்டால், ஈசனின் கருணை கிடைப்பதோடு, லட்சுமி தேவியின் பரிபூரணமான அருளையும் பெறலாம். வில்வ மரத்தில் மட்டுமின்றி வில்வ இலைகளிலும் மகாலட்சுமி வாசம் செய்வதால், வில்வ இலைகளுக்கு தனிச்சிறப்பு உண்டு.

வீடுகளிலும் வில்வ மரம் வளர்க்கலாம். வீட்டில் வில்வ மரம் வளர்த்தால் அஸ்வ மேத யாகம் செய்த பலன் கிடைக்கும். ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்த புண்ணியம் உண்டாகும். 108 சிவாலயங்களை தரிசனம் செய்த பலனும், புண்ணிய நதிகளில் நீராடிய பலனும் கிடைக்கும். வில்வ மரம் வளர்ப்பவர்களை ஏழரை சனி நெருங்காது. வில்வ மரத்தை தினமும் பூஜித்தால் செல்வம் பெருகும். கடன் தொல்லைகள் மறையும். வெள்ளிக்கிழமைகளில் வில்வ மரத்தின் கீழ் அமர்ந்து லட்சுமி துதி சொல்லி நைவேத்தியம் படைத்து வழிபட்டால் அளவிட முடியாத அளவுக்கு அற்புதங்கள் நடக்கும். வில்வ மரத்துக்கு ஸ்ரீவிருட்சம் என்றும், வில்வ பழத்துக்கு ஸ்ரீபழம் என்றும் பெயருண்டு.

மருத்துவ ரீதியாகவும் நிறைய பலன்களை வில்வம் தருகிறது. தினமும் வில்வ மரத்தடியில் தியானம் செய்தால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். ஊளைச் சதை குறையும். வில்வ இலை பொடியை சாப்பிட்டால் கண் பார்வை தெளிவாகும். பல் வலி நீங்கும். சளி, இருமல், சைனசுக்கு வில்வ இலை பொடி சிறந்த மருந்தாகும். கொழுப்பு கட்டுப்படும். ரத்த அழுத்த பிரச்சினை தீரும். சர்க்கரை நோய் குணமாகும். அல்சர் பிரச்சினை வரவே வராது. ஜீரணக்கோளாறுகள் சரியாகும். உடல் குளிர்ச்சி பெறும். இதனால் தோல் சம்பந்தபட்ட எந்த வியாதியும் வராது. இன்னும் ஏராளமான மருத்துவ பலன் தரும் வில்வ தளத்தை பறிக்கும் போது பயபக்தியுடன் பறிக்க வேண்டும்.

வில்வமெல்லாம் சிவன்

**ஆக்கம்: பிரிந்தா பாஸ்கரன்**

*சிவனின் நடனத்தோற்றம் இறைவனின் ஐந்தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களைக் குறித்து நிற்பதாகச் சைவ நூல்கள் கூறுகின்றன.*
*உடுக்கை – படைத்தலையும், அடைக்கலம் தரும் கை – காத்தலையும், தீச்சுவாலை – அழித்தலையும், தூக்கிய கால்கள் - அருளல் ஆகிய முத்தி நிலையைக் குறிப்பதாகவும் கொள்ளப்படுகின்றது.*

# தமிழ் வேதங்களாகிய தேவார திருவாசகங்களின் மகிமை

**"நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த**
**மறை மொழி தானே மந்திரம் என்ப "**

தமிழ் மொழி நூல்களுள் காலத்தால் முந்திய தொல்காப்பியம் மறை மொழி என்றால் என்ன என்பதற்கு விடை தருகின்றது. எமது சமய குறவர்களும், நாயன்மார்களும் நான்மறை பற்றித் தமது பாடல்களில் கூறியுள்ளனர் . தித்திக்கும் திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர்,

**"நன்றாக நால்வருக்கு நான்மறையின் உட்பொருளை**
**அன்றாலின் கீழ் இருந்தங்கு அறமுரைத்தான் காணேடீ "**

தமிழ் வேதம் கூறும் நான்கு மறைகளான அறம் , பொருள் , இன்பம் , வீடு முதலிய நாற்பொருளை சிவபெருமான் உணர்த்தினார் என்று கூறுகின்றார்.

திருமுறைகளில் ஆலமர்செல்வன் வேதங்களை உரைத்தான் என்று வரும் இடங்களில் சைவசித்தாந்தத்தின் உட்பொருளாகிய அறம், பொருள், இன்பம், வீடு முதலிய நாற்பொருளை உணர்த்தியதாகவே சித்தாந்த அறிஞர்களால் கூறப்படுகின்றது. சைவநெறி ஆதியில் இருந்தே ஒழுகப்பெற்ற நெறி , விரிவுடைய நெறி, காலத்தின் வேகத்தால் அந்நெறியில் பல திருப்பங்கள், மாற்றங்கள் ஏற்படுவது இயற்கை . எமது சைவநெறி நிலைமாறும் போதும், தடுமாறி தழம்பும் போதும் எம் இறைவன் அருளால் சைவநெறியை நிலைநிறுத்தி, மக்களை நல்வழிப்படுத்த நாயன்மார்கள் , சான்றோர்கள், ஞானிகள் தோன்றினர் . அப் பெரியோர்கள் உண்மைப்பொருள் எது என மக்களுக்குச் சுட்டிக் காட்டி அவர்களை நன்னெறிக்கு இட்டுச் சென்றனர் .

தமிழ் வேதங்களாகிய தேவார திருவாசகங்கள் தித்திக்கும் தமிழ் மொழியில் எழுந்தவை . எம் முழுமுதற் கடவுளான சிவனாலேயே எழுதப்பட்டதாக எமது வரலாறு கூறுகின்றது. தமிழ் மொழி உணர்ந்த எந்த நிலையிலுள்ள மக்களும் தம் வாயாரப் பாடி, உணர்ந்து, பயன் பெறத்தக்க வகையில் அமைந்துள்ளன. தமிழ் வேதங்கள் பாடிய நாயன்மார்கள் இவ்வுலகில் அவதாரம் செய்தவர்கள். அவதாரம் என்பது மேல் நிலையில் இருந்து கீழ் இறங்கி வருதல் என்பது பொருள். எம் நாயன்மார்கள் தம் பெருங்கருணையினாலே நம்மிடையே வந்து நமக்கு வழிகாட்டியுள்ளனர். திருவாசகத்திற்கு உருகாதார், ஒரு வாசகத்திற்கு உருகார் என்பது ஆன்றோர் வாக்கு. மாணிக்கவாசக சுவாமிகள் எம்பெருமானின் ஆதியும், அந்தமும் இல்லாத பழமைத் தன்மையையும், பெருமைகளையும், இறைவனின் குணங்களையும் தமிழில் வேதமாக ஓதி உணர்த்தியுள்ளார் .

இவ்வுலக இன்பத்தை நுகர்ந்து கொண்டே பிறவிப் பயனாகிய பேரின்பப் பெருவாழ்வை அடைய வழிகாட்டுவது சைவநெறி. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பெனும் செம்பொருள் காண வழிகாட்டுவது சைவ சித்தாந்தம். தமிழ் வேதங்களை அருளிய நால்வரும் தாம் பக்தி நெறியில் வாழ்ந்து, இறைவனின் அன்பில் அமிழ்ந்து திழைத்தவர்கள். அதற்கு வழியாகச் சரிகை, கிரிகை, யோகம், ஞானம் எனும் நன்கு படிமுறையில் ஒழுகச் செய்வது சைவநெறி- சிவநெறி. இச் சிவநெறியில் சிறந்து விளங்குவது அன்புவழி . அன்பு தான் இன்பம். அன்பே சிவம் என்று கூறுவது சைவநெறி. தமிழ் வேதங்களை அருளிய நாயன்மார்கள் நால்வரும் பக்திநெறியில் அன்புவழி வாழ்ந்து நம்மையும் வாழ நெறிப்படுத்துகின்றனர்.

எம் நாயன்மார்கள் பாடிய தேவார திருவாசகங்கள் எமக்கு கிடைத்தற்கரிய திரவியங்கள். அவற்றை அன்போடும், சிரத்தையோடும் போற்றிப் பேண வேண்டும். அத்தமிழ் பாக்களின் பொருள் அறிந்து ஓதவேண்டும். இவற்றை எம் திருக்கோவில்களில் முதன்மை கொடுத்துப் பாடவேண்டும். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி தமிழ் வேதங்களை பாடும் போது இறையருள் எமக்கு கிடைக்கின்றது. 'எனை நன்றாக இறைவன் படைத்தனன், தனை நன்றாக தமிழ் செய்யுமாறே' எனத் திருமூலர் அடிகளார் கூறியது போன்று, நாமும் இறைவனை தமிழில் பாடி வணங்குவோம். எம் அடுத்த தலைமுறையினருக்கு, எம் இளையவர்களுக்கு தமிழ் வேதத்தின் சிறப்பையும், வலிமையையும் எடுத்துக்கூறி, பாடுவதால் ஏற்படும் நன்மைகளையும் தெளிவு படுத்தவேண்டும்.

சிவபுராணத்தில் கூறுவது போன்று,

**"சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்**
**செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ்**
**பல்லோரு மேத்தப் பணிந்து "**

நாம் எம் இறைவனை எமக்கு தெரிந்த மொழியில் பொருளறிந்து பாடி வணங்கும் போது , எமது பக்குவ நிலைக்கேற்ப இறைவன் எம்மை வழிநடத்துவான் .

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**
**வைத்தியநாதா போற்றி போற்றி**

ஓம் நமசிவாய! ஓம் நமசிவாய! ஓம் நமசிவாய!

- **ஆக்கம்: சைவசித்தாந்த மாணவன் , கலாநிதி பா. சஞ்சயன்**

**ஓம்**

# சைவமும் தமிழும்

அகிலமே அஞ்ஞான இருளில் அமிழ்ந்திருந்த காலத்தில் தமிழ் மக்களது இரு கண்களாய் மிளிர்ந்த சைவமும் தமிழும் நமது பாரம்பரிய பண்புகளையும் மெய்ஞ்ஞானக் கருத்துக் களையும் பகலவன் ஒளி போல் பரப்பியிருந்தன. அதற்குக் காரணமானவர்கள் அன்று வாழ்ந்த ஞானியராவர் . அன்று மட்டுமல்ல, இன்று வரைக்கும் இறைஞானத்தினாலும், பக்தி பரவசத்தினா லும் பல சமயம் சார்ந்த நூல்களை எழுதியவர்களும், பாமாலை பாடியவர்களும் பலர் வாழ்ந்து வருகின்றனர். வேத, ஆகம நுட்பங்களை ஐயந்திரிபற உணர்ந்து இயல், இசை, ஓவியம் சிற்பம், கட்டடக்கலைகள் மூலம் சமயத்தையும் , தமிழையும் விண்முட்டும் வண்ணம்

வியாபிக்கச் செய்தனர். சோழர்காலத்துச் சிவாலயங்களும் ஈழத்துப்பாடல்பெற்ற சிவாலயங்களும் ஓங்காரரூபத்துடன் ஒய்யாரமாகக்காட்சி அளிப்பதைக் காணலாம்.

இற்றைக்கு 2ம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக்கருதப்படும் சுந்தரநாதன் என இயற்பெயரைக் கொண்ட திருமூலர் சைவம் சிவத்துடன் தொடர்புடையதெனவும், "அன்பே சிவம்" என்றும் , "என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத்தமிழ் செய்யுமாறே!" என்றும் பாடினார். இவர் சைவ சித்தாந்தத்தின் உட்பொருட்கள் யாவற்றையும் அடக்கி மூவாயிரம் பாடல்களைக்கொண்ட திருமந்திரத்தை, பக்தி மார்க்கத்தில் உள்ளவற்றைத் தோத்திரம் என்றும், ஞான மார்க்கத்திலுள்ளவற்றை சாத்திரம் என்றும் வகுத்துப்பாடினார். திருமந்திரம் பெரியபுராணத்தில பத்தாம் திருமுறையாக வகுக்கப்பட்டது.

சங்க காலத்திலும், அதற்குப்பின்னரும் ஔவையார் என்ற பெயரில் மூவர் வாழ்ந்தனர் என்றும், அவர்கள் சைவத்திற்கும் தமிழுக்கும் மிக்க தொண்டாற்றினர் என்றும் அறிகிறோம். ''பாலும் தெளிதேனும்'', ''வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்'' என்னும் அருட்பாக்களும், குழந்தைக ளுக்காய அகரவரிசைப்பாடல்களும் பாடினர். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி போன்ற சுவையும் சுருக்கமுமான பாடல்கள் மிக அறிவு சார்ந்தவை.

5ம் நூற்றாண்டில் வாழ்ந்த புனிதவதியார் என்ற காரைக்காலம்மையார் ''அற்புதத்திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், கொங்கை திரங்கி, ஆதியோடு அந்தமிலான் அருள் நடனமாடும்போது'' போன்ற பல திருப்பதிகங்களைத் தாளத்துடன் மிக இனிமையாகப் பாடினார். அவரது பாடல்களின் இனிமையும் ஆழமான பொருள்நயமும் இறைவனை மெய்ம்மறக்கச் செய்ததனால் இறைவன் திருநடனம் ஆடும் போது அவர்கள் அருகில் இருக்கும் பெரும் பேற்றைப் பெற்றார்.

சேக்கிழார் பெருமான் எழுதிய பெரியபுராணம் சைவத்திற்கும் தமிழுக்கும் கிடைத்த அரிய பொக்கிஷமாகும். இந்நூல் காப்பிய இலக்கணம் கொண்டதாயும், சுந்தரரின் திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகவும், அவரைக் காப்பியத்தலைவராகவும் கொண்டும், அவர் போற்றிய அடியார்களின் வாழ்க்கை வரலாற்றினையும் கொண்டுள்ளது.அத்துடன் இறைவன் "உலகெலாம்" என்று அடி எடுத்து க் கொடுக்க "உலகெலாம் உணர்ந்து ஓதுதற் கரியவன்" எனப் பெரியபுராணத்தைப் பாடத்தொடங்கினார். இது "தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா ,திருப்பல்லாண்டு, திருமந்திரம், திருமுகப்பாசுரம்" என பகுக்கப்பட்டது.

திருமுறை பாடியவர்களான ஞானசம்பந்தர் , நாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரும், திருவாசகம் பாடிய மாணிக்கவாசகரும் பாடிய பாசுரங்கள் தேனினும் தித்திப்பவை, அற்புதங்கள் நிறைந்தவை, மனித சமுதாயத்தை உய்விக்க உகந்தவை. இறையன்பு பெருக்கெடுக்க, இலக்கிய நயம் மிளிர எழில் நயம் கொண்டு பாடப்பட்டவையாகும். திருவாசகமும். திருக்கோவையாரும் பாடிய திருவாதவூரரை "மாணிக்கவாசகர்'' என்று அழைத்தவர் இறைவன் அல்லவா! இவர்கள் நால்வரும் திருவைந்தெழுத்தின் மகிமையை உலகுக்கு எடுத்துக்காட்டிய அருளாளர் ஆவர்.

இன்னும் பரஞ்சோதி முனிவர் பாடிய பைந்தமிழ் பூண்ட திருவிளையாடற்புராணம், சந்தன குரவர் பாடிய சிவஞானபோதம், திருவருட்பயன்போன்றவை இறைவனால் கவரப்பட்டவையாகும்.

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த ஆறுமுகநாவலர் சைவநெறி தளைத்தோங்கவும் , தமிழ் மொழி செழித்து வளரவும் பெரும் பணி ஆற்றியவராவர். யோகசுவாமி அருளிய திருப்பாடல்கள் "நற்சிந்தனை" என்ற தலைப்பில் "சிவத்தொண்டன்" இதழில் திங்கள் தோறும் வெளிவந்த ஞானப்பொக்கிஷமாகும்.

மேலும் குன்றக்குடி அடிகள்,கிருபானந்த வாரியார் சுவாமிகள் போன்ற அருளாளர்கள் பலர் தங்கள் புலமையும், நாவன்மையும் பொலிந்த ஆன்மிகக்கருத்துக்கள் அடங்கிய சொற்பொழிவுகளாலும், கதா பிரசங்கங்களாலும் பாமரமக்களையும் பரவசப்படுத்தினர் என்பது பெருமைக்குரியதல்லவா!

**ஆக்கம்: செல்வதிரவியம் மாணிக்கவாசகர்**

ஓம் நமச்சிவாய !

# திருக்கோணேசுவரம்

**"கோவிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரே "**

இலங்கையின் கீழ்த்திசையில் அமைந்துள்ள எழில் நகரம் திருகோணமலை .இங்கு , பெரிய நதியாகிய மகாவலி கங்கை கடலுடன் கலப்பதால் நீர் வளமும் , நில வளமும் பெற்ற பூமியாகவும் இயற்கையாகவே அமைந்துள்ள துறைமுகம் கொண்ட நிலமாகவும் விளங்குகின்றது .

இலங்கை' புண்ணிய பூமி ' என்று திருமூல நாயனார் புகழ்ந்து கூறியுள்ளார் . அகத்திய முனிவர் தவமியற்றிய புனித பூமியான இங்குதான் ஐந்து ஈச்சுரங்களில் ஒன்றான திருக்கோணேஸ்வரம் அமைந்துள்ளது .இது திரிகூடம் ,தென் கைலாயம் ,தட்சிண கைலாயம் எனும் பெயர்களால் அழைக்கப்படுகின்றது . இத் தலத்தின் சிறப்புக் காரணமாக திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் "கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரே " எனச் சிறப்பித்துப் பாடுகின்றார் .அருணகிரிநாதர் கோவில்க் கோபுரச் சிறப்பினைத் திருப்புகழில் பாடியிருக்கின்றார் .

இறைவன் - திருக்கோணேஸ்வரர் , இறைவி - மாதுமை அம்பாள் , தலவிருட்சம் - கல்லாலமரம் ,தீர்த்தம் - பாபநாசம் . கல்லாலமரம் மலையில் வேரூன்றிச் செழிப்பாக வளர்ந்திருப்பதைக் காணலாம் .முதலில் இங்குதான் மலைப்பூசை நடைபெறுகின்றது .இங்கு தீர்த்தமாடுபவர்களின் பாவம் நீங்கிவிடும் என்பதால் பாபநாசம் எனும் பெயர் உண்டாயிற்று என்பர் .

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் மலையின் உச்சியிலும் இடையிலும் அடியிலும் மூன்று கோவில்கள் இருந்ததாக வரலாறு கூறுகின்றது . மலை அடிவாரத்தில் இருந்த கோவில் கிறீஸ்துவிற்கு முன் கடற்கோளினால் கடலில் மூழ்கியதாகச் சொல்லப்படுகின்றது . ஆழ்கடலில் இருக்கும் கோணேஸ்வரருக்கு இன்றும் மலைப்பூசை நடப்பதைக் காண்கின்றோம் . ஆழியினடியில் இன்றும் கோவிலின் பல பாகங்கள் ,தூண்கள் ,சிலைகள் காணப்படுவதாக 1961இல் ஆழ்கடல் ஆராய்வாளர் மக்வில்சன் கூறியுள்ளார் .

கடற்கோளிற்குப் பின் 7ம் நூற்றாண்டில் இத் தலம் சிறப்புற்று விளங்கியது .இலங்கையை ஆண்ட இராவணன் வழிபட்டுப் பேறுபெற்ற தலம் என்று கூறப்படுகின்றது .இராவணன் சிவபக்தையான தனது தாயாருக்கு சிவலிங்கம் ஒன்றைப் பெற விரும்பி பெயர்த்த மலை தட்சிணகைலாயமாகிய திருகோணமலை . இதற்குச் சான்று பகர்வது போல் 'இராவணன் வெட்டு ' எனும் மலைப் பிளவு இன்றும் காணப்படுகின்றது .

தன் தாயின் இறுதிக் கிரியைகளுக்காக கன்னியா எனும் இடத்தில் வில்லினால் நிலத்தில் ஏழு முறை குத்திய போது ஏழு வெந்நீர்க் கிணறுகள் தோன்றியதாகக் கூறப்படுகின்றது .இன்றும் அக் கிணறுகள் அங்கே உள்ளன.

இக் கோவிலின் வரலாறு 3287 ஆண்டுகள் பழமையானது எனக் கூறப்படுகின்றது . 1624இல் போர்த்துக்கேயர். இவ் ஆலயத்தைப் பாழ்படுத்தினர்.அவ்வேளையில் பக்தர்களும் பணியாளர்களும் திருவுவங்களை எடுத்துச் சென்று கிணறுகளிலும் குளங்களிலும் பாதுகாப்பிற்காக இட்டார்கள் . திருவுருவத்தை தம்பலகாமத்திலுள்ள மருதவளம் என்ற ஊரில் மறைத்து வைத்து வழிபாடு செய்தனர் .அக் கோவில் இன்று ' ஆதிகோணேஸ்வரர்' என்ற பெயருடன் சிறப்புற்று விளங்குகின்றது . பல ஆண்டுகளுக்குப் பின் நகரசபையினர் கிணறு தோண்டும் பொழுது சிவனருளோ என்று அதிசயிக்கும் வண்ணம் மாதுமையாள் சமேதரராக கோணேஸ்வரப் பெருமானோடு சந்திரசேகரர் ,பார்வதியார் ,பிள்ளையார் முதலிய தெய்வங்கள் வெளிப்பட்டன . அவை யாவும் அண்மைக்காலத்தில் அமைக்கப்பட்ட கோவிலில் எழுந்தருளிச் செய்யப்பட்டுள்ளது .

சுதந்திரம் அடைந்த பின் 1950ம் ஆண்டு முன் கோவில் இருந்த இடத்தில் ஆலயம் அமைக்கப்பட்டு காசியிலிருந்து சிவபெருமானை எழுந்தருளச் செய்து வழிபட்டு வந்தனர் .1956ம் ஆண்டு கோணேஸ்வர கோவில் பரிபாலன சபையினர் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து 1963இல் கும்பாபிசேகம் செய்தனர். இன்று புதிதாக அமைக்கப்பட்ட கோவில் 'திருக்கோணேஸ்வரம் ' எனும் பெயருடன் விளங்குகின்றது .

பண்டைய காலத்தில் பல மன்னர்கள் இக்கோவிலிற்குத் தொண்டு செய்தனர் . அதில் குளக்கோட்டு மன்னன் குளம் தொட்டு வளம் பெறச் செய்தான் என்றும் முன் கோட்டை வாசலில் ஒரு கல்வெட்டு அமைத்தான் என்றும் கூறப்படுகின்றது. இதை இப்போதும் காணக்கூடியதாக இருக்கின்றது .

" முன்னே குளக்கோட்டன் மூட்டும் திருப்பணியை பின்னே பறங்கி பிரிக்கவே மன்னவ பின் பொன்னாத்ததனை இயற்ற வழித்தேவைத்து எண்ணாரே பின்னரசர்கள் " இதன் விளக்கம் குளக்கோட்டன் மூட்டும் திருப்பணியை பின்னே பறங்கி பிரிக்கவே பின்னரசர்கள் இதைப் பேணமாட்டார்கள் என்று எதிர்காலம் பற்றிக் கூறியது வியப்பிற்குரியது .

இக் கோவிலில் ஆறு காலப்பூசைகள், சிவராத்திரி காலத்தில் சிறப்புப் பூசைகள், சக்கர பூசை, கொடியேற்றத் திருவிழா யாவும் சிறப்புற நடைபெற்று வருகின்றது. புண்ணிய தலமாகிய திருக்கோணேஸ்வரம் பற்றிக் கூற இன்னும் உண்டு.

எல்லாம் வல்ல இறைவனின் அருளைப்பெற்று வாழ வாழ்த்துன்றோம்.
ஓம் நமசிவாய!

**ஆக்கம்: தேவிகாராணி சச்சிதானந்தன்**

# இலங்கையின் புராதன சைவசமய வரலாற்றுக் கண்ணோட்டம்.

இலங்கையானது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இந்திய உபகண்டத்தோடு இணைந்திருந்த நாடாகும் காலப்போக்கில் கண்ட அசைவு காரணமாக தமிழ் நாட்டின் சமயப் பின்னணி இலங்கையில் செல்வாக்குச் செலுத்தியிருந்தது. இலங்கையின் வரலாறு எழுத்து மூலாதாரமாக மாகவம்சமே பிரதான இடத்தை வகிக்கின்றது. ஆனாலும் இந்நூல் எழுத்துவதற்கு முன்னர் இலங்கையில் காணப்பட்ட பல்வேறு வரலாற்றுச் சம்பவங்களை வட இந்தியாவில் எழுதப்பட்ட இதிகாசங்களான இராமாயணம் அதிக அளவிலும் மகாபாரதம் சிறிய அளவிலும் எமக்கு தருகின்றன. இவ்விரு இதிகாசங்களும் குப்தர்காலத்தில் இறுதி எழுத்து வடிவம் பெற்றிருந்த போதும் அவற்றில் குறிப்பிடப்பட்ட சம்பவங்கள் அந்நூல்கள் எழுதுவதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்பது வரலாற்று ஆய்வாளர்களின் கருத்தாகும்.

இலங்கையின் ஆதிக்குடிகள் இயக்கர் நாகர் என்ற திராவிட மக்கள் என்பதை இலங்கையின் வரலாற்று நூல்கள் அனைத்தும் ஏற்றுக் கொண்டுள்ளன. இந்த இயக்கர் நாயகர் வழிப்பாடு சிவசர்ப்ப வழிபாட்டு முறையாகும். இராமாயணத்தில் குறிப்பிட்ப்படும் இலங்கை வேந்தன் இராவணனின் பாட்டனாரான புலத்திய முனிவரின் காலத்திலும் அவரின் பின்வந்த இராவணன காலத்திலும் சிவ வழிபாடு நிலைத்திருந்ததை அறிய முடிகின்றது. இதற்கு சான்று தருவதாக இராவணனின் தாயரின் வழிபாட்டிற்காக திருக்கோணேசர் ஆலயத்தை பெயர்க்க முற்பட்ட சம்பவத்தை பிரதிபலிக்கும் இராவணன் வெட்டு சிவவழிபாட்டின் தொன்மைக்கு சான்று பகர்கின்றது.

இலங்கை வரலாற்றுத்துறை அறிஞரான கலாநிதி பீரிஸ் அவர்கள் விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் அதாவது கி.மு 2500 ஆண்டுகளுக்கு முன்னரேயே இலங்கையில் கருதிற் கொள்ளக் கூடிய முழு இந்தியாவின் வழிபாட்டிற்குறியதான வடக்கே நகுலேச்சரம் தெற்கே கதிர்காமம் வடமத்தியில் முள்னேஸ்வரம் வடமேற்கில் திருக்கேதீஸ்வரம் வடகிழக்கில் கோணஸ்வரம் என தீவின் சகல திக்குகளிலும் சிவத்தலங்கள் மலிந்து அருளாட்சி பெருகி சிவமணம் கமிழ்ந்த புண்ணிய பூமியாகும்.

இலங்கையை ஆண்ட முதல் மன்னர்களான மாலியவான், சுமாலி, குபேரன், இராவணன் ஆகியோர் சிவ வழிபாடுடைய சைவர்களாவர். இராவணன் 1000 சிவ லிங்கங்களை இலங்கையின் பல பாகங்களிலும் நிறுவியிருந்தான். தண்ட காருணியம் தொடக்கம் இலங்கை வரை வாழ்ந்த திராவிடரிடையே சிவ வழிபாடு உன்னத நிலையில் இருந்தது என கலாநிதி கிரையர் வேத இந்தியா என்னும் நூலில் கூறியுள்ளார். இலங்கையை பொறுத்தமட்டில் அங்குள்ள மொழி – எழுத்து – மதம் ஆகியவை பல்லினத்தன்மை கொண்டிருந்த போதும் மிகப் பழமை வாய்ந்தவர்களாக இந்து மக்களையே ஞாபகத்தில் கொள்ள வேண்டுமென பிரபல வரலாற்றாசிரியர் வங்காளத்தில் நடைபெற்ற மகாநாட்டில் கூறியுள்ளார். கி.மு 6ம் நூற்றாண்டில் விஜயனும் 700 தோழர்களும் தம்பபண்ணியில் வந்து இறங்கியதாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. கலிங்கத்திலிருந்து வந்த விஜயன் ஒரு திராவிடன் அவனோடு வந்தவர்களும் திராவிடர்களே யாவர்.

இலங்கையின் முதலாவது தலைநகராக மகாவம்சம் பதிவு செய்யும் அனுராதபுரம் கி.மு 4ம் நூற்றாண்டில் பந்துகாபயனால் தலைநகரமாக்கப்பட்டது. அவன் அங்கு சிவிகசாலா சொத்தி சாலா என்னும் இரு இல்லங்களை அமைத்தான். சிவிகசாலா என்றால் சிவலிங்க இல்லம் என அறியப்படுகின்றது. சிவலிங்க சாலர் என்பது சிவலிங்க கோவில் என இலங்கை வரலாற்றாய்வளர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். பந்துகாபயனும் பின் வந்த அரசர்களும் தமது பிள்ளைகளுக்கு மூத்தசிவா சிவகுப்தா மகாசிவ என்னும் பெயர்களை சூட்டியதன் மூலமும் சிவ வழிப்பாடு இலங்கையில் நிலை பெற்றிருந்ததை அறிய முடிகின்றது. அனுராதபுரத்தை ஆட்சிசெய்த மானவர்மன் தன் மனைவியின் வேண்டுகோளுக்கிணங்க பாலாவிக் கரையில் சந்திரசேகருக்கு ஆலயம் கட்டியதுடன் தன் இளைய மகனுக்கு கீர்த்தசிவன் எனப் பெயர் சூட்டினான். இவையனைத்தும் இலங்கையில் சிவ வழிபாடு ஏற்படுத்திய தாக்கமாகும்.

விஜயன் இலங்கை வருவதற்கு முன்னரும் பின்னரும் இந்நாட்டில் சைவம் செழிப்புற்றிருந்ததென வணக்கத்துக்குறிய வல்பொல இராகுல தேரர் எழுதிய “இலங்கையின் பௌத்த வரலாறு” என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். “திரு.ஜே.டபிள்யூ ரெனற”; என்பவர் எழுதிய “இலங்கையின் சரித்திரம்” எனும் நூலில் இலங்கையில் ஆதிக்குடிகள் சைவர்களே எனக்கூறுகின்றார். “உறுகுணனத் தேசிய பூங்காவில்” கண்டெடுக்கப்பட்ட கி.மு.காலத்ததெனக் கணிக்கப்படும் கல்வெட்டொன்றில் “சிவநகர்” என்ற இடப்பெயர் குறிப்பிடப்பட்டிருந்தமையும் இதற்குச் சான்றாகும். இலங்கை தமிழ் நூல் வரிசையில் முதன்மை பெறும் யாழ்ப்பாண வைபவ மாலை என்னும் நூலிலும் விஜயன் பழைய சிவாலயங்களை புனரமைத்தான் என்றும் பாதுகாப்பிற்காக நான்கு புதிய சிவாலயங்களை அமைத்தான் எனவும் கூறப்படுகின்றது. விஜயனுக்குப்பின் பல்வேறு காலத்தில் குழுக்காக வந்தவர்களும் சைவசமயத்தை சார்ந்தவர்களாகவே காணப்பட்டனர். அவர்களில் பாண்டிய நாட்டு இளவரசி குழுவினரும் பாண்டு வாசுதேவன் குழுவினரும் பத்தகச்சானா குழுவினரும் குறிப்பிடத்தக்கவர்களாகவர்.

தமிழ்நாட்டில் சிறப்புப் பெற்றிருந்த காலத்தால் முற்பட்ட நூல்களும் இலங்கையின் சைவசமய நிலை பேற்றிற்கு சான்றாக உள்ளன. அந்தவகையிலும் பன்னிருத்திருமுறை நூல்களில் காலத்தால் முற்பட்ட திருமந்திரத்தில் இலங்கையிலும் பெருங்கற் பண்பாடு நிலவிய போது முருக வழிப்பாடு கைக் கொள்ளப்பட்ட புதைபொருள் ஆய்வொன்று நிரூபித்துள்ளது. வேலாயுதங்களும் சேவற்சிலையும் காவடி செதில்களும் மாதோட்டம் கந்தரோடை முதலிய இடங்களிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. விஜயன் வருகைக்கு முன் இலங்கையில் குடியேறிய தமிழ்நாடு கேரளா ஆந்திரப் பிரதேசத்தவர்கள் பலகல்வெட்டுக்கான தமிழ்ப்பிராமிய வரிவடிவங்களில் எழுதியுள்ளனர் அக்கால பயன்பாட்டு பொருட்களான சிற்பங்களிலும் விளக்குகளிலும் அம்மி ஆட்டுக்கல் குளவி சங்கு முதலான வற்றிலும் கடவுளின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்தன. இரத்தினபுரி மாவட்டத்தில் உடரஞ்சமடம என்னுமிடத்தில் அகழ்ஆய்வுவின் மூலம் கண்ட ஈமக்கல்லறை ஒன்றில் திரிசூலவடிவமும் நாக உருவமும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கி.மு 4ம் நூற்றாண்டு தொடக்கம் 10ம் நூற்றாண்டு வரை இலங்கை அரசியலில் அனுராதபுரகாலமெனப்படுகிறது. இக்காலத்தில் இந்துமதம் இலங்கை மக்களிடையே மட்டுமன்றி அரசியலிலும் செல்வாக்குப்பெற்றிருந்தது. அனுராதபுரத்தை ஆண்ட பண்டுவாசுதேவன் அபயன் பண்டுகாபயன் முதலானோர் சைவர்களாகவே இருந்திருக்கின்றனர். அனுராதபுர இராசதானியில்

அந்தணர்கென ஒரு பகுதியை வகுத்திருந்தனார் என்றும் சிவன்கோயில் ஒன்று நிறுவப்பட்டதை மகாவம்சம் ஏற்றுக் கொள்கிறது. அனுராதபுர இராசதானியில் பிராமணர்கள் அரசசபையில் புரோகிதராகவும் ஆலோசகராகவும் வைத்தியராகவும் செல்வாக்குப் பெற்றிருந்தனர்.

கி.மு.145 – 101 வரையிலான காலத்தில் அனுராதபுரத்தை ஆண்ட எல்லாளன் தமிழ் மன்னனாவான் இவர் காலத்தில் சைவசமயம் மேலோங்கிக் காணப்பட்டது. கி.பி.2ஆம் நூற்றாண்டில் கஜபாகுமன்னால் சேரநாட்டிலிருந்து பத்தினித் தெய்வவழிபாடும் இலங்கையில் வளர்ச்சிபெற்று காணப்பட்டது. திருக்கோணேஸ்வரம் திருக்கோதீஸ்வரம் ஆலயங்கள் மீது திருஞானசம்பந்தராலும் சுந்தராலும் பதிகம் பாடப்பட்டன. சம்பந்தரரின் பதிகங்களில் ஒன்பதாம் பாடலில் ‘இராவணன் மேலது நீறு’ என இராவணன் சிறப்பித்துப் பாடப்பட்டமை அவரது சிவபக்திக்கும் மேலும் வலுச்சேர்க்கின்றது. இவ்விரு ஆலயங்களும் 1017-70 வரை சோழர் ஆட்சியின் போதும் சிறப்புற்றிருந்தன. இக் காலத்தில் கோணேஸ்வரம் குளக்கோட்டானால் புனருத்தாரணம் செய்யப்பட்டு ஆலயங்களுக்குரியதான கிரகங்களும் உருவாக்கப்பட்டன. கந்தளாயில் பிராமணர் குடியேற்றத்தையும், குச்சவெளியை யாகங்களுக்கான மூலிகைக் கிராமமாகவும், திரியாயை ஆலயத்திற்கான திரி, பசு நெய்க்காகவும், மல்லிகைப் பூவிற்கு மல்லிகைத் தீவும், சந்தனக் கட்டைகளுக்கு கட்டைபறிச்சான் கிராமமும் ஒதுக்கப்பட்டிருப்பதையும் காணமுடியும். இவ்வாலயத்தின் மகோற்சவம் திருமலை மாவட்ட முழுக் கிராமங்களும் சேர்த்தே செய்யும் சிறப்பையும் பெற்றிருக்கின்றது.
ஒட்டு மொத்தமாக நோக்குமிடத்து புராதனகால இலங்கையில் சைவசமயம்; பல பாகங்களிலும் பரவியிருந்ததை மேற் கூறிய வரலாற்றுச் சான்றுகள் நிரூபித்துக்காட்டியுள்ளன.

**ஆக்கம்: செ.கலைச்செல்வன்**
**பகுதி நேர விரிவுரையாளர், ஆசிரியர் கலாசாலை, கோட்டகலை**

**"பின்னை நின்று என்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே."**

- திருமூலர் பெருமானார் (திருமந்திரம்)

முன்பு நன்கு முயற்சி செய்து தவம் செய்வதில்லை. அதன்பின் என்ன பிறவியைப் பெற முடியும்.? என்னை நன்றாக இறைவன் படைத்திருக்கிறான், "தமிழாகிய தன்னை நன்றாக இந்த உலகிற்குப் புரியும் வகையில் எழுதுமாறு என்று" என்கிறார் திருமூலர் பெருமானார்.

# POLYTHEISM OF HINDU RELIGION

For those who are more familiar with Semitic religious concept of God where the God is a regal person who creates, control and pass judgment will find it difficult to understand the Hindu concept of God. Hindus call the ultimate reality of God as Brahman which should not be confused with the creator deity Brahma. Everything conceived by human perception undergoes constant change, but there is one changeless reality. This cannot be conceived by intellect; thus, it cannot be defined. In Vedas we have six aphorisms called "*mahavakiyas*". Referring to Brahman it says *'Prajanam Brahma',* meaning Brahma is supreme awareness/ consciousness, which clearly connotes it is not a finite person. Another aphorism enunciates *'Ayam Atma Brahma",* meaning Atman and Brahma are the same. This concludes that all that we perceive is but illusion caused by ego as separate self. The truth is that the God we seek is none other than our own self and it is to be found within. The state of consciousness is to be realized here and now through self-inquiry.

All that we see and perceive is but that which emanated from Brahman or God, and finally it converges to its source. Hindu religion states clearly that there was no time Brahma existed without that which has been created. The creator and created are the same. In Geeta verse 2.12 it is told,

***'Never was there a time when I did not exist, or you***

***Or these kings; nor will there comes a time when we ceased to be'.***

One may immediately ask what about all these deities in the Hindu Temples. God is supremely intelligent, ultimate cause from which the entire universe has emerged, in which it exists, and into which it eventually devolves. Humans living in air cannot see the air, living being living in water cannot see water. Likewise, Brahman who encompasses and exists everywhere cannot be realized from within. The Hindu concept of God portrays one without attributes or form. The finite equipment of the human does not allow him to comprehend the infinite, formless One in its entity. The formless and all-pervading Brahman has been assigned forms only for convenience of the aspirant, as most people cannot concentrate on the form and nameless. St. Manickavasagar on the first verse of his poem *Tellenam* mentions thus on the first verse; 'To Him who hath nor name, or form, A thousand sacred names sing we and beat Tellonam!".

There is a wrong popular view among other religions that the Hinduism has many idolatrous God. But those Idols in fact represent the many aspects of one universal God. In 'The religions of Man', author Huston Smith says:

It is clumsy to confuse Hinduism's images with idolatry and her many images with polytheism. They are but runways from which man's heavy sense-embodied sprit can take off for its "flight of the alone to Alone". Even village Hindu priests will frequently open their temple worship with the following beloved invocation:

***O Lord, forgive three sins that are due to my human limitations:***
***Thou art everywhere, but I worship you here;***
***Thou art without form, but I worship you in these forms;***
***Thou needs' no praise, yet I offer these prayers and salutations.***
***Lord, forgive three sins that are due to my human limitations.***

Hinduism refers to various aspects with various deities as Gods. Hinduism is not polytheistic, but based on varying schools of Hindu philosophy. They see formless God in different forms highlighting various aspect of God, where their dualistic relationship with God. One can choose whoever deity as his chosen deity and worship to him. The chosen deity is called the *Ishta deivam.* What ever form one worships the God will appear in that form a Hindu believes. Once a devotee has chosen a deity will have total faith and surrender to gain the benefit of worship.

It was well said by Mahatma Gandhi as; "An idol does not excite any feeling of veneration in me. But I think that idol worship is part of human nature. We hanker after symbolism. Why should be one more composed in church than elsewhere? Images are an aid to worship. No Hindu considers an image to be God".

So let us use what our forefathers had discovered aid to worship and soar high in divine path and be blessed by that one God who is supreme. May the blessings of the almighty be with you all.

**Authored by: Kumar Punithavel.**

நானேயோ தவஞ்செய்தேன்
சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த்
தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம்
புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை
ஒறுத்தன்றே வெறுத்திடவே

உண்மையான அன்பு என்பது மன்னித்தலும், விட்டுக் கொடுத்தலுமே.
அன்பு காட்டப்படும் இடத்தில் அகிலமும் அடங்கிவிடும். அன்பே சிவம்!

# Nāyanmār - Enlightened beings




Nāyanmār is some of the best devotees of Lord Shiva, who lived in Tamil Nādu during the Third to Eighth centuries CE. Among them, few are well versed in religious texts, and the others are only great devotees. Many of them have lived in various industries. But they proved that a true surrender of devotion is enough to attain godliness, and they did reach the feet of Lord Shiva. It is the lesson that to be learned from their life. Among Nāyanmārs, some have sung Padhikams knows as the poetry of greatness, some have become the companion, some came looking for the lord's friendship, and some performed many miracles. During this period, when the women were at home, some started involving Shiva Pooja and succeeded. It is wonderful to know that they, too, were liberated.

Sundaramoorthy Nāyanār introduced Nāyanmārs in Thirutthonnḍar-Thokai. It is the belief that Lord Shiva himself directed Sundarar to sing by starting "Thillavāzh Anthanar Tham Adiyārkku Adiyēn…" which means servant to all the servants (devotees) of Lord Shiva. He composed eleven songs while he was in the Tiruvārūr temple. He sang only on sixty devotees with the guidance of the lord. But have mentioned seventy-two servants' names in Thirutthonnḍar-Thokai. It contained fifty-eight male and two female devotees.

One hundred years after the time of Sundaramoorthy, in the Tenth century, king Rāja Rāja Chōlan I (985-1013 CE) collected the volumes of Padhikam after hearing excerpts of the hymns in his court. The king gave it to his priest Nambiāndār Nambi Adigal to rebuild. Nambi then created the Thirutthonḍar- Thiruvandāthi. Next, he arranged the melodies of three saint poets Thirugnāna-Sambandar (7th century), Thirunāvukkarasar (7th century), and Sundaramoorthy Nāyanār (8th century), as the first seven volumes, called the Panniru-Thirumurai, which means twelve religious divisions of hymns. Next, he compiled Mānikkavāsakar's (9th century) Thirukkōvayār and Thiruvāsakam as the eighth volume, the twenty-eight hymns of nine other saints as the ninth volume, the Thirumandiram of Thirumoolar and forty hymns by twelve other poets as the tenth volume. Finally, in the eleventh volume, he created the Thiruthonḍanār-Thiruvandāthi, a literature necklace of verses of the Nāyanmārs, also known as Thirutthoṇḍar-Andādi.

The Thirutthoṇḍar-Andādi consisted of eighty-nine poems, with poetry devoted to each of the saints. Also, he selected sixty individual Nāyanmārs who sang Padikams and added Sundaramoorthy and both his parents and made it to sixty-three in total. Here it contains sixty male and three female devotees. Nāyanmārs are categorized by their time of living, casting, place, real name, and nickname. It shows that there is no restriction for true and pure devotion for salvation.

Among the sixty-three Nāyanmār, the three devotees, Thirugnāna-Sambandar (Sambandar), Thirunāvukkarasar (Appar), Sundaramoorthy Nāyanār (Sundarar), and Manickavāsagar were the first. These four are called Saiva Nārt Kuravar or Saiva Samaya Kuravar. They are the four great saints of Saivism who took birth in the world, showing us the path of elevating oneself to the supreme Shiva. When the invasions that put Buddhism and, more specifically, Jainism on the royal throne, the art, architecture, and lifestyle of the people that kept them as an example of civilization diminished because of the self-punishing and colorless religions. So, the Tamil lands and Hinduism underwent a dark period during the fourth, fifth, and sixth centuries in Tamil Nādu. At that time, the four Samaya Kuravar were making a tremendous effort to keep the Saivam and its practice in Tamil Nādu. They traveled through the length and breadth of Tamil Nādu, kindling the spiritual confidence that the god is not a difficult one and you all can live blissfully and get supreme liberation, sing, hail, worship our Lord shiva's fame. By their tireless effort, they brought back the light in the faces of the masses. For bringing about these changes, they had to undergo many fatal threats given by the emperors of the land.

The life history of these sixty-three devotees is in Periyapurānam (1135 CE), which composed in the time of king Kulōthunga Chōlan II by Sēkkizhar. He expanded and gave the records of the devotees as a great legend. Periyapurānam is one of the significant works of literature for Saivam, also called Thiruthonnḍar Purānam. Sēkkizhar went to Chidambaram temple and worshipped Lord Nataraja to guide him in composing the Periyapurānam. The god replied to him to start with 'Ulagelām.' With total surprise and god's grace, Sēkkizhar began writing. Periyapurānam contains four thousand two hundred and eighty-three poetries. Here Thirugnāna Sambandar's life history includes one thousand two hundred and fifty-six poetries and the largest among the poetry in Periyapurānam.

The four Saiva Samaya Kuravar has shown us four different ways for transcendence.

**Sathputhra Mārkam:** Thirugnāna-Sambandar worshiped the lord as his Parents.
**Dhāsa Mārkam**: Thirunāvukkarasar worshiped lord as his Boss.
**Saka Mārkam:** Sundaramoorthy Nāyanār worshiped the lord as his Friend.
**San Mārkam**: Manickavāsagar worshiped the lord as his Teacher.

As per Āgama, every Shiva temple must have all sixty-three Nāyanmār's idols placed inside. Suppose cannot, then at least the four leading saints to be placed. In addition, the Panachalōka (mixture of five different metals: Mercury, Silver, Copper, Zinc, and Iron) statues of sixty-three devotees will be in a procession on a particular day. This procession is known as 'Arupatthu Moovar Veedi Ulā,' which means the procession of sixty-three devotees. The places where Nāyanmārs were born are called Nāyanmār Avatāra Thalams. Of these, fifty-eight sites are in Tamil Nādu, one in Pōndichērry, one in Andhra Pradēsh, one in Karnātakā, and two in Kēralā.

The traditional prayers in all Shiva temples include a Tamil Prayer called Pancha Purānam. They are known as Thēvāram, Thiruvāsakam, Thiruvisappā, Thiruppallānndu, and Thiruppurānam which are the collecting of Nāyanmārs' poet from Panniru Thirumurai. There is no Shiva Pooja done without singing Pancha Purānam.

The songs of the four leading saints are vital, nurturing the minds to be a mature love and wise abode of the supreme Shiva. They set the melody in the name of Pann while composing them and called it Pannisai. Over centuries, the ancient Pann evolved first into a pentatonic scale and later into the seven-note Carnatic Music. The influence created through Padhikam stays even now after a millennium by god's grace should continue to inspire the minds of the generations to come. There is a belief that these Padikams can be beneficial by singing them regularly for success. Hinduism has given so many resources in our lives to relieve our suffering, poverty, and disease. Therefore, let us practice them and respect them.

**அறுபத்துமூவர் துதி**

"தத்து மூதெயின் மூன்றுந் தழலெழ முத்து மூரன் முகிழ்த்த நிராமய
சித்து மூர்த்திதன் றாளிணை சேரறு பத்து மூவர் பதமலர் போற்றுவாம்"

**Authored by: Guhendran Saravanapava**
Artistic Director: Jegatheeswaralaya Fine Arts, Ottawa

## THIRUMURAI BHAJANS FOR CHILDREN

